Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39 | கதிர் : 229

வெள்ளிக்கிழமை 12 ஜூலை 2024

ஆனி 28 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2055

**முச்சந்தி முரளி**



"உந்தப்பதவியளுக்கு அடிபடத்தான் சனங்கள் இவைக்கு வாக்குப்போட்டவையோ?"

# முல்லையில் கோரவிபத்து; முதியவர் ஒருவர் பலி!

மூவருக்கு படுகாயம்!



முல்லைத்தீவு, ஜூலை 12

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் முல்லைத்தீவு, மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதி காலை இடம்பெற்ற விபத்தில் முதியவரொருவர் உயிரிழந் 15

# நாடாளுமன்றக் குழுத்தலைமை வழங்க மறுத்தால் தனி அணி!

புளொட், ரெலோ தீவிர பரிசீலனை

யாழ்ப்பாணம், ஜூலை 12

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைமைப் பதவியை வழங்குவதற்கு மறுத்தால், நாடா ளுமன்றத்தில் தனி அணியாக இயங்குவது தொடர்பில் ரெலோவும் புளொட்டும் ஆலோசனை நடத்திவருவதாக அறியமுடி கின்றது.**

15

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட

## ரயில் ஊழியர்களுக்கு பணிவிலக்கல் கடிதம்!

கொழும்பு, ஜூலை 12

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள ரயில் ஊழியர்கள் சேவையிலிருந்து விலகிச் சென்றதாகக் கருதி, சுமார் ஆயிரம் பேருக்குத் தபால்மூலம் பிரத்தியேகக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சர் பந் துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். 15

அத்துமீறிய மீன்பிடி!

## தமிழக மீனவர்கள் 13 பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜூலை 12

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி சட்டவிரோத மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 13 பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 15

## 'ஸ்மார்ட் யுத் நைட்' முற்றவெளியில் இன்று

பிரபல பின்னணிப்பாடகர் க்ரிஷ் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற் பாட்டில், 'ஸ்மார்ட் யுத் நைட்' நிகழ்வு யாழ்ப்பா ணம் முற்றவெளியில் இன்று இரவு 7 மணி யளவில் இடம்பெறவுள்ளது.

பாடகர்களான க்ரிஷ், செந்தில்தாஸ், ரம்யா, சவுந்தர்யா, ரேஸ்மா ஆகியோர் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-ம)

பிரதமரின் பங்கேற்பில்

## யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களுடைய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று!

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் சிறப்பு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் தலைமையில் இன்று இடம்பெறவுள்ளன. 15



விபத்தில் படுகாயமடைந்த

## பருத்தித்துறை நகரசபையின் முன்னாள் நகரபிதா மறைவு!

யாழ்ப்பாணம், ஜூலை 12

விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த, பருத்தித்துறை நகரசபையின் முன்னாள் நகரபிதா வேலுப்பிள்ளை நவரத்தின ராசா நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி அவர் முல்லைத்தீவு நோக்கி மோட் டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது 15

## யுவதி கடத்தல் மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஊர்காவற்றுறையில் 19 வயது யுவதியொ ருவர் கடத்தப்பட்ட நிலையில், அந்த யுவதி மீட்கப்பட்டதுடன், மூவர் சந்தேகநபர்களா கக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறையில் உள்ள தேவாலயம் ஒன்றுக்கு அருகாக வைத்து யுவதி கடத்தப் பட்ட நிலையில், சிறிது தூரம் பயணித்த பின்னர் அந்த யுவதியை 15

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலர்

## ஜோசப் ஸ்டாலின் போன்றோர் தீவிரவாதிகளே!

அமைச்சர் காஞ்சன ஆவேசம்

புலிகளுடனும் ஒப்பிட்டு விமர்சனம்

கொழும்பு, ஜூலை 12

நாட்டில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்காக சில தொழிற்சங் கங்கள் தீவிரவாத அமைப்புப்போல செயற்படுகின்றன. ஜோசப் ஸ்டாலின் போன்றவர்கள் தீவிரவாதிகள்தான் என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். 15

## படுகொலையாளிகளை கைதுசெய்ய வேண்டும்!

சஜித் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 12

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம், மகேஸ்வரன் ஆகி 15

## சட்டமா அதிபராக பாரிந்த ரணசிங்க

அரசமைப்புப் பேரவை அங்கீகாரம்

கொழும்பு, ஜூலை 12

ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்கவை சட் டமா அதிபராக நியமிப்பதற்கு அரசமைப்புப் பேரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சபாநாய 15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதானியின் திட்டம் நிச்சயம் நடைமுறை

## அரச வட்டாரங்கள் தகவல்


**கொழும்பு, ஜூலை 12**

**சூழல் பாதிப்புகள் குறித்த கரிசனைகள் வெளியாகியுள்ள போதிலும் அரசாங்கத்தின் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் தொடர்பில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் தயாரில்லை. அந்தப் பகுதியிலேயே காற்றாலை மின் உற்பத்திக்கு அதிக வாய்ப்புள்ளது என்று அரசாங்கத்தின் உயர்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

மன்னார் பூநகரியில் உருவாகவுள்ள அதானி நிறுவனத்தின் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தால் சூழலுக்குப் பாதிப்பு. அந்தத் திட்டம் தொடர்பில் போதிய வெளிப்படைத்தன்மை இல்லை போன்ற கரிசனைகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் நீதிமன்றில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

காற்றாலை மின் உற்பத்திக்கு அந்த இடமே சிறந்தது. அதனால் இதுகுறித்து எந்த விட்டுக்கொடுப்பையும் செய்யமுடியாது. சூழல் பாதிப்புகளைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மாத்திரம் அரசாங்கம் தயார்.

அதன்படி இந்தத் திட்டம் காரணமாக வலசப்பறவைகளின் பாதைகள் அவற்றின் வாழ்விடங்கள் மற்றும் இனப்பெருக்க முறைகள் ஆகியவற்றுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் தயார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# ஐ.தே.க. உறுப்பினர் சஜித்துடன் இணைவு

கொழும்பு, ஜூலை 12

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட்டியலில் வேட்பாளராகவும், 2020 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான சட்டத்தரணி கிருஷ்மால் வர்ணசூரிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார்.

இவர் இலங்கை, ஹேக் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் 24 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டவராவார். நாட்டின் 10 சிறந்த இளம் ஆளுமைகளில் ஒருவராகவும் அவர் பெயரிடப்பட்டிருந்தார்.

சட்டத்துறையில் பரந்துபட்ட அறிவைக் கொண்டுள்ளதன் காரணமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நன்மதிப்பை பெற்ற ஒருவராகவும் அவர் விளங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# சட்டமா அதிபர் பதவியில் ஆணாதிக்கமா?

## ஐ.ம.ச. எம்.பி. கேள்வி

கொழும்பு, ஜூலை 12

சட்டமா அதிபர் நியமனத்தில் ஆணாதிக்கம் நிலவுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோகிணி குமாரி ஜெயவர்த்தன நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் பதவிக்குப் பொருத்தமான பதில் சட்டமா அதிபர் ஆயிஷா ஜினசேன இருந்தும் அவருக்கு சட்டமா அதிபர் பதவி வழங்கப்படாமல், சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பரிந்த ரணசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் பால்நிலை சமத்துவச் சட்டம் நிறைவேற்றப்பட்டு இரண்டு வாரங்களில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஆயிஷா ஜினசேனவுக்கு சட்டமா அதிபர் பதவி வழங்கப்பட்டிருந்தால் இலங்கையின் முதலாவது பெண் சட்டமா அதிபர் என்ற பெருமை அவருக்குக் கிடைத்திருக்கும். அரசாங்கம் வெளிநாடுகளுக்கு காட்டுவதற்காகப் பல்வேறு சட்டங்களை நிறைவேற்றுகின்ற அதேவேளை பெண்களை ஓரங்கட்டும் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறது. எந்த அடிப்படியில் ஆயிஷாவுக்கு சட்டமா அதிபர் பதவி வழங்கப்படாமல் பரிந்தவுக்கு வழங்கப்பட்டது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப-6)

# வெற்றி இலக்கை அநுர அடையார்

## நாலக எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 12

தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கி அதிகரித்திருந்தாலும் ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்கவால் வெற்றிபெறமுடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த ஜனாதிபதித் தேர்தலைவிட இம்முறை கூடுதல் வாக்குகளை அநுரகுமார திஸாநாயக்க பெறுவார். ஆனால் அவரால் வெற்றி இலக்கை அடையமுடியாது. 70 இலட்சம் வாக்குகளை அவரால் கனவில்கூட நினைத்துப் பார்க்கமுடியாது. சஜித் பிரேமதாஸவே நிச்சயம் வெற்றிபெறுவார். 55 இலட்சம் வாக்குகளில் இருந்தே அவரது பயணம் ஆரம்பமாகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்றே கருதுகின்றேன். மொட்டுக் கட்சி வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் ரணில் 4 ஆவது இடத்துக்குத் தள்ளப்படுவார். எனவே, தம்மிக்க பெரேராவை அந்தக் கட்சி நிறுத்தும் - என்றார். (ப-44)

# பாலியல் துன்புறுத்தல்கள் தடுக்க கொள்கைத் திட்டம்

கொழும்பு, ஜூலை 12

பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்களைத் தடுக்கும் நோக்குடன், தேசிய அளவிலான புதிய கொள்கைத் திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம், அனைத்துத் தரப்பினருக்கும் எதிரான பாகுபாடு, வன்முறை என்பவற்றைக் கட்டுப்படுத்தக்கூடிய வகையில் அமையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ப-6)

# வாடகைச்சட்டத்தில் திருத்தம் அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூலை 12

வாடகைச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள வாடகைச்சட்டம் 1972 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. புதிய சட்டத்தினூடாக வாடகை குடியிருப்பாளருக்கும் வீட்டு உரிமையாளருக்கும் சம உரிமை வழங்குவதற்கு சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த சட்டத்திருத்தத்துக்குச் சட்டமா அதிபர் அனுமதி வழங்கியுள்ளார். விரைவில் இந்தச் சட்டத்திருத்தம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ச-6)



## 1,700 ரூபா வேண்டும்

# கிளர்ந்தெழுந்த மலையக மக்கள்

கொழும்பு, ஜூலை 12

தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 1700 ரூபாவை வழங்குமாறு வலியுறுத்தி மலையகத்தின் பல்வேறு இடங்களில் கவனவீர்ப்பு போராட்டங்கள் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

அதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் கொழும்பிலுள்ள முதலாளிமார் சம்மேளன அலுவலகத்துக்கு முன்னாலும் பெருந்தோட்ட நிறுவனமொன்றின் தலைவரும், தொழிலதிபருமான தம்மிக்க பெரேராவின் வீட்டுக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது தம்மிக்க பெரேராவின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது. (ச-6)

# 'சுவசெரிய'வுக்கு 'டாட்டா' வால் அம்புலன்ஸ்கள்

கொழும்பு, ஜூலை 12

இந்தியாவின் முன்னணி நிறுவனமான 'டாட்டா' நிறுவனம் 'சுவசெரிய' 1990 அம்புலன்ஸ் சேவைக்கு 50 அம்புலன்ஸ்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

ஆசிய அபிவிருத்திவங்கி 45 அம்புலன்ஸ்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

'சுவசெரிய' 1990 அம்புலன்ஸ் சேவையை தொடர்ந்து நடத்துவதற்கு நிதி வசதி இல்லையென சுகாதார அமைச்சு தெரிவித்திருந்த நிலையில் இந்த அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. (ச-25-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழரின் அரசியல் தீர்வுக்காக

# சுதந்திரம் தொடர்பில் தனியான வாக்கெடுப்பு

### அமெரிக்க காங்கிரஸின் தீர்மானத்துக்கு 150க்கும் மேற்பட்ட அமைப்புகள் ஆதரவு

**கொழும்பு, ஜூலை 12**

**ஈழத்தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்காக சுதந்திரம் குறித்த சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவேண்டும் எனக் கோரும் அமெரிக்கக் காங்கிரஸின் தீர்மானத்துக்கு 150க்கும் மேற்பட்ட அமைப்புகள் தங்களின் ஆதரவை வெளியிட்டுள்ளன.**

ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு பொதுவாக்கெடுப்பே தேவை என்று அமெரிக்க காங்கிரஸில் கடந்த மே மாதம் 15ஆம் திகதி தீர்மானமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு பரந்துபட்ட ஆதரவுத் தளம் காணப்படுகின்ற நிலையில், 150க்கும் மேற்பட்ட சர்வதேச அமைப்புகள் அந்தத் தீர்மானத்தை வரவேற்பதாகத் தெரிவித்துள்ளன.

இலங்கையில் மனிதஉரிமை நிலவரம் மோசமடையும் தருணத்தில், இந்தத் தீர்மானம் அமெரிக்கக் காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்கம் பற்றி இலங்கை அரசாங்கம் பேசுகின்ற போதிலும், தமிழர்கள் மீதான இனப்படுகொலையின் 15ஆவது நினைவேந்தல் நிகழ்வில் இடம்பெற்ற சம்பவங்கள் நேர்மையான நீதி மற்றும் பொறுப்புக்கூறல் குறித்து இலங்கை அரசாங்கம் அரசியல் உறுதிப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என்பதையே வெளிப்படுத்தியுள்ளன என்று மேற்படி புலம்பெயர் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. (அ-ம)

# படைவீரர்களுக்கு முன்னுரிமை

கொழும்பு, ஜூலை 12

நாட்டின் அனைத்து அரசாங்க மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களில் சேவையைப் பெற்றுக்கொள்ளும்போது படைவீரர்கள் மற்றும் அவர்களில் தங்கி வாழ்வோருக்கு முன்னுரிமை வழங்கும் முறைமையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரணவின் தலையீட்டில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்த மற்றும் ஊனமுற்ற படைவீரர்களில் தங்கி வாழ்வோர் இந்தத் திட்டத்தின் மூலம் கூடுதல் நன்மையைப் பெற்றுக்கொள்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# காக்கைதீவு மீன்சந்தையில் பழுதடைந்த கடலுணவு அழிப்பு

யாழ்ப்பாணம். ஜூலை 12

யாழ்ப்பாணம் - காக்கைதீவு மீன் சந்தையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பழுந்தடைந்த இறால்களை அழிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காக்கைதீவு சந்தையில் பழுதடைந்த மீன் மற்றும் இறால்கள் விற்பனை செய்யப்படுவதாக ஆனைக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சந்தையில் திடீர் சோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பழுதடைந்த மீன்கள் மற்றும் இறால்கள் மீட்கப்பட்டதுடன் அவற்றை நீதிமன்றில் சான்றுப்பொருள்களாகப் பாரப்படுத்தியபோது பழுதடைந்த கடலுணவுகளை உடன் அழிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ச-20)

# புதுமணத் தம்பதிகளுக்கு குழந்தை வளர்ப்பு பயிற்சி

### அரசாங்கம் நடவடிக்கை

புதுமணத் தம்பதிகளுக்கு குழந்தை வளர்ப்பு குறித்து கற்பிக்கும் வகுப்புகளை நடத்த தயாராகி வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. தாய்ப்பாலூட்டுதல், குழந்தைகளை வளர்த்தல், பிள்ளைகளைப் பெற்ற பின் பராமரிப்பது போன்ற விடயங்களில் அவர்களுக்கு போதிய அறிவு இல்லாத காரணத்தால் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. 'யுனிசெப்' நிறுவனத்துடன் இணைந்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் குடும்ப சுகாதாரப் பணியகத்தின் சமூக விசேட மருத்துவ நிபுணர் ஆசிரி ஹேவமலகே தெரிவித்துள்ளார். (ச-இ)

### தென்னாசிய கால்பந்துப்போட்டி

# சென்.பற்றிக்ஸ் மாணவன் தெரிவு



தென்னாசிய நாடுகளுக்கான 15 வயதுக்குட்பட்டோருக்கான கால்பந்துப் போட்டியில் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் அல்காந்தறா விக்மிலன் பங்கேற்கவுள்ளார். இந்தப் போட்டி அடுத்த மாதம் இந்தியாவின் பெங்களூரில் நடைபெறவுள்ளது. இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனத்தால் நடத்தப்பட்ட தேசிய மட்ட 15 வயதுப்பிரிவு தேசிய கால்பந்தாட்ட அணிக்கான வீரர் தெரிவில் அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25)

# அதிபர்களின் பிரச்சினை ஆராய்வதற்காகக் குழு

பாடசாலை அதிபர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஆசிரியர் தரத்தில் இருக்கும் ஒருவர் அதிபர் தரத்துக்கு தகுதியின் அடிப்படையில் மாற்றப்படும் போது அவர்களின் அடிப்படைக் கொடுப்பனவு குறைவடைகின்றது. இது காலம் காலமாக இருந்து வரும் பிரச்சினையாகும். மேலும் தொடர்பாடல் கொடுப்பனவு மற்றும் போக்குவரத்துக் கொடுப்பனவுகளை திறைசேரியின் உதவியுடன் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## தினம் தெரியுமோ?

**கொஞ்சநாளா இஞ்ச நடக்கிற அமளி, துமளியில சொல்லவேண்டிய கனவிசயங்களைச் சொல்ல நேரமில்லாமல் போட்டுது. ஆனால் அப்பிடியேவிட்டால் ஆறின கஞ்சி பழங்கஞ்சியா போய், பஞ்சி பிடிச்சு, அதைச் சொல்லாமலே விடக்கூடும். அதால அதுகளையும் இடைக்கிடை பாக்கத்தான் வேணும். இப்பிடிச் சொல்லமறந்த கதையளில முக்கியமானது, சம்பந்தரின்ர திருவுடலை வைச்சு, அரசியல் செய்தவையைப் பற்றித்தான்.**


**சம்பந்தருக்கு திடீரெண்டு ஏலாம வந்து, கொழும்பில செத்தவுடனேயே அவரின்ர திருவுடலை வடக்கு, கிழக்கில உள்ள எல்லா மாவட்டத்துக்கும் கொண்டு வரவேணும் எண்டு எல்லாரும் கோரிக்கைவிட்டவை. ஆனால் சம்பந்தரின்ர குடும்பத்தார் அதுக்கு மாட்டன் எண்டு போட்டினம். 'கொழும்பில மலர்ச்சாலையிலயும், பார்லிமெண்டிலையும் வைச்சுப்போட்டு, அப்பிடியே திருகோணமலையில ஐயான்ர வீட்டில கொண்டுபோய் திருவுடலை வைக்கிறது' எண்டதுதான் அவையின்ர முடிவு. அதை அவை தெளிவாச் சொல்லியும் போட்டினம். எண்டாலும் கட்சிக்காரர் விடேலை. ஒவ்வொருத்தரா மெல்லமெல்ல அவையின்ர மனசை மாத்த கதைவிட்டுக்கொண்டே இருந்திருக்கினம். கடைசியில அவையின்ர ஆய்க்கினை தாங்கேலாமல் 'சரி, கிளிநொச்சியிலயும், யாழ்ப்பாணத்திலையும் மட்டும் வைச்சிட்டு அப்பிடியே திருகோணமலைக்கு திருப்பிக் கொண்டு போவம்' எண்டு ஒரு எம்.பி.க்கு வீட்டுக்காரர் சொல்லிப்போட்டினம். அதை நம்பி, அந்த எம்.பி.யும் புளுகத்தில எம்பிக் குதிச்சிட்டார். 'கிளிநொச்சியில சம்பந்தரின்ர திருவுடல் வரும். அஞ்சலி செய்ய ரெடியா இருங்கோ' எண்டு அறிக்கையும் விட்டிட்டார்.**

**ஆனால் இப்பிடி அவர் ஆதாயம் தேட, அவரின்ர போட்டி எம்.பி. 'சும்மா' இருப்பாரோ? சம்பந்தரின்ர திருவுடல் கிளிநொச்சிக்குப் போனால், அவர்தான் சம்பந்தரின்ர வாரிசு எண்டமாதிரி ஆகிடும் எண்டிட்டு, 'வாகனத்தால சம்பந்தரை கிளிநொச்சிக்கு கொண்டு போறது கடும் கஷ்டம். பேசாமல் பிளைட்ல கொண்டு போவம். நேரமும் மிச்சம். முதலே பிளான் பண்ணினபடி திருகோணமலையில வெள்ளியில இருந்து அஞ்சலியும் செய்யலாம். அதோட பிளைட்ல கொண்டுபோய் யாழ்ப்பாணத்தில வைச்சால் கிளிநொச்சி சனமும் அங்க வந்து அஞ்சலி செய்வினம்' எண்டு அவர் தன்ர பங்குக்கு ஐடியா சொல்லியிருக்கிறார், அவ்வளவுதான். கிளிநொச்சி அஞ்சலியை அம்போ எண்டு போட்டிட்டு, யாழ்ப்பாணத்திலதான் சம்பந்தரின்ர உடலை வைக்கிறதெண்ட முடிவுக்கு எல்லாரும் வந்திட்டினம். அவரின்ர அஞ்சலியை வைச்சு, தங்கட அரசியல் 'பவரைக்' காட்டத்தான் இப்பிடி கிளிநொச்சிப் பிளானை மாத்தினவை. ஆனால் கடைசியில யாழ்ப்பாண அஞ்சலியில எத்தினைபேர் போனவையெண்டு அங்க நிண்டவைக்கு வடிவாத் தெரியும். ஒரு பெருந்தலைவரை அவரின்ர சாவுக்கு பிறகு, இப்பிடி தாங்கள் அரசியல் ஆதாயம் தேட நினைச்சு, கடைசியில அவரைத் தூக்கிறதுக்குக்கூட ஆக்களைத் தேடிப்பிடிக்க வேண்டியளவுக்கு அவமானப்படுத்திப் போட்டினம் கண்டியளோ.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆங்கிலத் திரைப்படம் யாழில் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஏணஸ்ற் ஹெமிங்வே எழுதி நோபல் விருது பெற்ற 'கிழவனும் கடலும்' என்ற நாவலின் திரைவடிவம், ஆங்கிலத் துணைத் தலைப்புகளுடன் ஜூட் ரெய்லரின் நெறியாள்கையில் 'த ஓல்ட் மான் அன்ட் த சீ' எனும் ஆங்கிலத்திரைப்படம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு அருகிலுள்ள தந்தை செல்வா கலையரங்கில் வெளியிடப்படவுள்ளது.

பார்வையிடுவதற்கான அனுமதி இலவசம் என்று யாழ்ப்பாணத் திரைப்படக் கழகம் தெரிவித்துள்ளது. இதில் அனைவரும் கலந்துகொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

மீசாலை அருள்மிகு பன்றிக்கேணி கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை சப்பரத்திருவிழாவும், 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுமென ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ச-25, 131)



கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை மணிவாசகர் குருபூசை நடைபெற்றது. பாடசாலை அதிபர் ஜெயரூபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் செஞ்சொற் சொல்லருவி லலீசன் கலந்துகொண்டு திருவாசகம் தொடர்பாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களை வழங்கிவைத்தார். (ச-9)

# நீதிபதி இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 12

நீதிமன்ற வளாகத்திலிருந்து தனது வீட்டுக்கு மின்சார இணைப்பு பெற்ற நீதிபதி ஒருவர் பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதிவான் கோசல சேனாதீரவே பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் மவுண்ட்லேனியா நீதிவானாகக் கடமையாற்றிய காலப்பகுதியில் நீதிமன்ற வளாகத்திலிருந்து தனது இல்லத்துக்கு சட்டவிரோதமாக மின்சார இணைப்பு பெற்றதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மின்சாரசபையினர், நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை உத்தியோகத்தர்கள் உட்பட இருபது சாட்சியங்களின் அடிப்படையில் நீதிச் சேவை ஆணைக்குழு கோசல சேனாதீரவை நீதிவான் பதவியிலிருந்து இடை நிறுத்தியுள்ளது. (ஓ-6)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

மீசாலை ஸ்ரீ நரசிங்க வைரவர் காளி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் குருமணி சிவஸ்ரீ இரத்தின திருமாறக்குருக்கள் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.45 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-25,131)

# 'உன்னத சங்கீதம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 12

கவிஞர் பானுபாரதி, நோர்வேஜிய மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்த கவிதைகளின் தொகுப்பு நூலான 'உன்னத சங்கீதம்' எனும் புத்தக வெளியீட்டு விழா, இல. 18/2, திருவடிநிலை, அம்மன் வீதியில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

எழுத்தாளரும், கவிஞருமான இயல்வாணன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பேராசிரியர் சி.ஜெயசங்கர், கலாநிதி சு.குணேஸ்வரன், அமுதா, கவிஞர் காயத்திரி ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர். (ப)

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகமும் கிளிநொச்சி உளநலச்சங்க நிறுவனமும் இணைந்து நடத்திய பால் நிலை சமத்துவம் தொடர்பான வீதி நாடக ஆற்றுகை நிகழ்வு நேற்று வியாழக்கிழமை பளை றோ. க. த.க. பாடசாலை, வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை ஆகியவற்றில் இடம்பெற்றது. இதில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவு, சமூக சேவை பிரிவு உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-9)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கு உகந்த நாள். தேவையான பணம் கையில் இருப்பதால் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. உடல்நலனில் கவனம் செலுத்தவும். பணிச் சுமை குறையும். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும்.

**கடகம்:** உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். குடும்பப் பொறுப்புகளை உற்சாகமாக நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** அதிர்ஷ்டகரமான நாள். எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** உற்சாகமான நாள். உடல்நலனில் கவனம் தேவை. வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே நடைபெறும். உங்கள் முயற்சிகளுக்கு பங்குதாரர்களின் ஆதரவு கிடைக்கும். விநாயகரை வழிபட மன மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உற்சாகமாகப் பேசி மகிழ்வீர்கள். காரியங்களில் சிறு சிறு தடைகள் உண்டாகும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். சகோதர வகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மகரம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்புள்ளது.

**கும்பம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**மீனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சிகளைத் தொடங்குவது நல்லது. காரியம் சாதகமாக முடியும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

# ஆனி உத்தரப் பூசை

யாழ்ப்பாணம், ஜூலை 12

'மயிலணிச் சிவன்' என அழைக்கப்படும் சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாதசுவாமி கோயில் ஆனி உத்தரப்பூசை வழிபாடு, இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச ஊழியர்களின்

# சம்பளம் அதிகரிப்பின் போராட்டம் வெடிக்கும்

## தனியார் துறையினர் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூலை 12**

**அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு நிகழ்ந்தால் அது பொது மக்களுக்கும் தனியார் துறைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்தால் தனியார் துறையினர் போராட்டத்தில் ஈடுபடுவார்கள்.**

-இவ்வாறு தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சம்பள உயர்வு, வெற்றிடங்களுக்கு ஆட்களை நிரப்புதல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளை முன்வைத்து பல்துறைசார் அரச தொழிற்சங்கப் போராட்டங்களால் பொதுச்சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், மக்களும் கொதிநிலையை அடைந்துள்ளனர்.

அரச ஊழியர்கள் கோரும் சம்பள அதிகரிப்பை வழங்கவேண்டுமென்றால் வற்வரியை 18 வீதத்தில் இருந்து 21 வீதமாக உயர்த்த வேண்டுமென தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

வற்வரியை உயர்த்தினால் பொது மக்களுக்கும் தனியார் துறைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்கினால் தனியார் துறையினர் போராட்டத்தில் குதிக்க நேரிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)



உடையார்கட்டு மூங்கிலாறு கிராமத்தில் வசிக்கும் பொருண்மியம் நலிவுற்ற குடும்பத்தினருக்கு தண்ணீரூற்று சத்ய சாயி நிலையத்தினரால் துவிச்சக்கர வண்டி ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டது. (ச-25)

# அபிவிருத்திச் சங்கங்கள் மீள்பதிவுகளை ஆராய்க

## ஆளுநர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

வடக்கு மாகாணத்தில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தொடர்பிலும் அதன் பதிவு தொடர்பிலும் விசேடகவனம் செலுத்துமாறு கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்துக்கு வடக்கு மாகாண ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றுக்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டமை தொடர்பில் ஆராய்ந்த போது அந்தச் சங்கம் பதிவுக்குட்படாமை அடையாளம் காணப்பட்டது.

அதற்கமைய வடக்கு மாகாணத்தில் சுமார் 2000 சங்கங்கள் காணப்படுகின்ற நிலையில் அதன் மீள் பதிவுகள் தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து வடமாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அதன் பணிப்பாளருக்கு ஆளுநர் அறிவுறுத்தினார். (ச-125)

# கண்துடைப்புக்காகவே அபிவிருத்திக் கூட்டங்கள்

மன்னார், ஜூலை 12

மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் என்ற போர்வையிலே அபிவிருத்திக் குழுவின் தலைவர் தனது அரசியலை முன்னெடுத்துச் செல்கிறார். அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் எதுவும்நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் என்.எம்.எம்.பாரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் அபிவிருத்திக் குழுக் கூட்டம் என்கிற போர்வையில் அபிவிருத்திக் குழுக் கூட்டம் இடம்பெற்று வருகின்றது.

அரச திணைக்கள அதிகாரிகளை அழைத்து செலவீனங்களை வழங்குகின்றார்களே தவிர எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் மக்களைச் சென்றடைவதில்லை. தனது அரசியலை முன்னெடுத்து செல்வதற்கும் தன்னைப் பிரபலப் படுத்திக் கொள்வதற்குமே மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் கூட்டத்தை நடத்துகின்றார் - என்றார். (ச-56)

# உற்பத்திப்பொருள்கள் கண்காட்சி அடுத்தவாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

பனை அபிவிருத்தி வாரக் கண்காட்சியும் விற்பனையும் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி ஒருவாரத்துக்கு நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமும் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் இணைந்து பனை அபிவிருத்திக் கண்காட்சியையும் விற்பனையையும் நடத்தவுள்ளன.

இந்தக் கண்காட்சியில் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இறுதி நாள் நிகழ்வில் பரிசில்கள் வழங்கலும், கௌரவிப்பு, கலைநிகழ்வுகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் அன்றையதினம் 'தாலம்' சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (ச-16)

# புலிகளை அழித்த எமக்கு பாதாளக்குழுக்கள் தூசியே

## கூறுகிறது பெரமுன



கொழும்பு, ஜூலை 12

நாட்டில் குற்றச்செயல்கள் தலைதூக்கினால் அது சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு மரணஅடியாக அமையக் கூடும். எனவே, பாதாளக் குழுக்களுக்கு முடிவு கட்டப்படவேண்டும். புலிகளை அழித்த எமக்குப் பாதாளக் குழுக்களை ஒடுக்குவது கடினமான விடயமாக அமையாது.

-இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷன தெனிபிடிய தெரிவித்தார்.

நாட்டில் தற்போது குற்றச்செயல்கள் தலைதூக்கி உள்ளன. நாளாந்தம் குற்றச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இந்தக் குற்ற அலையால் மக்கள் பீதியிலுள்ளனர். பாதாளக் குழுக்களுக்கு முடிவு கட்டப்படவேண்டும். சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு பாதுகாப்பான நாடாக இலங்கை காணப்பட்டது. இப்படியான குற்றங்கள் இடம்பெற்றால் அது சுற்றுலாத்துறையிலும் தாக்கம் செலுத்தக்கூடும்.

எனவே, புலிகளை அழித்த எமக்கு பாதாளக் குழுக்களுக்கு முடிவு கட்டுவது கடினமான காரியமாக அமையாது. அதற்குரிய நடவடிக்கை விரைந்து எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ச-44)





மன்னார், நானாட்டான் தூய ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்த திருவிழாத் திருப்பலி, அருட்தந்தை றெஜினோல்ட் அடிகளார் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திருவிழாத் திருப்பலிகூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்நாள் திருப்பலியில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். (ப-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல சவால்களுக்கு மத்தியிலேயே வடக்கு சுகாதாரத்துறை



## ஆளுநர் வேதனை

**யாழ்ப்பாணம், ஜூலை 12**

**வடக்கு மாகாண சுகாதாரத்துறை மிகப்பெரிய சவாலுக்கு மத்தியில் செயற்பட்டு வருகின்றது என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.**

பருத்தித்துறை தொண்டமானாறு பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட சித்த மத்திய மருந்தகம் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது உரையாற்றிய ஆளுநர், இந்தக் கட்டடத்தை நிர்மாணிக்க மக்களாக முன்வந்து தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொண்டுள்ளமை வடக்கு மாகாணத்துக்கே சிறந்த முன்னுதாரணமான செயற்பாடாகும்.

மக்கள் அரச உத்தியோகத்தர்களுடன் இணைந்து செயற்படவேண்டும். மக்களுக்காகவே அரசசேவை முன்னெடுக்கப்படுகின்றது.

மருத்துவ நிபுணர்களின் வெளியேற்றத்தால் வடக்கு மாகாண சுகாதாரத்துறை மிகப்பெரிய சவாலுக்கு மத்தியில் செயற்பட்டுவருகின்றது. தாதியர் பயிற்சிகளுக்கு எமது பகுதிகளில் இருந்து ஒருவரும் செல்வதில்லை. மருத்துவமனைகளில் வெளி மாகாணங்களைச் சேர்ந்தவர்களே அதிகளவில் பணியாற்றுகின்றனர். வடக்கு மாகாணத்தில் 138 மருத்துவ நிபுணர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றது. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு சுகாதார அமைச்சிடம் ஆளணி இல்லை. இவ்வாறான பல சவால்களுக்கு மத்தியிலேயே எமது சுகாதாரத்துறை இயங்குகின்றது.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே அரச உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்றனர்.

ஏதேனும் சேவைகள் உரிய முறையில் கிடைக்காவிடின் எங்களை சந்தித்து அவற்றிற்கான உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். - என்றார். (ஒ-26-66)



# கொல்லப்பட்ட பெண்ணுக்கு இராணுவ மரியாதை

முல்லைத்தீவு, ஜூலை 12

யாழ்ப்பாணத்தில் குத்திக் கொலை செய்யப்பட்ட பெண் இராணுவ மரியாதையுடன் கடந்த செவ்வாய்க்கிழமை அடக்கம் செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மூங்கிலாறு தெற்கு உடையார்கட்டைச் சேர்ந்த நிசானி (வயது - 29) என்ற இளம் குடும்பப் பெண் யாழ்ப்பாணத்தில் கடந்த 6ஆம் திகதி கொல்லப்பட்டிருந்தார்.

இவர் கடந்த 10 ஆண்டுகளாக கேப்பாபிலவு இராணுவ முகாமில் கடமையாற்றியுள்ளார்.

இந்த நிலையில் பெண்ணின் சடலம் மூங்கிலாறு தெற்கில் உள்ள அவரது இல்லத்துக்கு நேற்று எடுத்துவரப்பட்டு பூரண இராணுவ மரியாதையுடன் மூங்கிலாறு தெற்கு இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. (ஒ-19)



# அகழ்வாய்வுப் பணிகள் மாணவர்களுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஆனைக்கோட்டையில் அகழ்வாய்வுப் பணிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் தலைமையில் கடந்த மாதம் ஆரம்பமாகி முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் யாழ்.தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வரலாற்றுப் பாட உயர்தர மாணவர்கள் அகழ்வாய்வு மையத்தை பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதன்போது அகழ்வாய்வில் தமிழர் வரலாற்று முக்கியத்துவம், அதன் தொன்மை ஆகியவை குறித்து பேராசிரியர் புஸ்பரட்ணம் விளக்கமளித்தார். அத்துடன் தொல்பொருள்களை முறையாக ஆவணப்படுத்தல், அதன் விவரண விரிவாக்கம், முக்கியத்துவம், அகழ்வாய்வில் பின்பற்றப்படும் நெறிமுறைகள், இடத்தேர்வு தொடர்பாகவும் மாணவர்களுக்கு விரிவாக விளக்கப்பட்டன. (ச-22-66)

# தனது மக்களைக் கொன்ற ஒரேநாடு இலங்கைதான்

## நவாலி தாக்குதல் நினைவுநாளில் அருட்தந்தை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

தன்னுடைய சொந்த நாட்டு மக்களை குண்டு போட்டு கொலை செய்த ஒரே நாடு இலங்கைதான் என அருட்தந்தை சந்திரபோஸ் தெரிவித்தார்.

நவாலி தேவாலயத்தில் இலங்கை வான்படைத் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கான 29ஆவது ஆண்டு நிறைவு திருப்பலியினைத் தொடர்ந்து ஆற்றிய பிரசங்கத்தின் பொழுது அவர் இவ்வாறு தெரிவித்தார். (ஒ-25)






# நந்திக்கடல் சேற்றை அகற்றக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 12

முல்லைத்தீவு நந்திக் கடலில் நிறைந்துள்ள சேற்றை அகற்றித் தருமாறு கடற்றொழிலாளர் கடற்றொழில் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போர்க் காலத்தின் போது அமைக்கப்பட்ட மண்ணணைகள் கரைந்து, நந்திக்கடலில் சேர்ந்து கடல் நீரில் சேறு நிறைந்துள்ளது. இதனால் கடல் உணவுகளின் பெருக்கம் குறைந்து காணப்படுவதால் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டிலிருந்து நந்திக்கடலிலுள்ள சேற்றை அகற்றித்தருமாறு தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-25-13)



இராணுவத்தினால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட வீமன்காமம் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் முத்தையா சிவராஜாவின் 34 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. (ஒ-66)

# மாடுகளை கடத்தியவர் விபத்தில் மாட்டினார்

வவுனியா, ஜூலை 12

ஹையஸ் ரக வாகனமொன்றை வாடகைக்கு அமர்த்தி சட்டவிரோதமாக மாடு கடத்திய நபரின் வாகனம் விபத்துக்குள்ளானதில் பொலிஸாரிடம் சந்தேகநபர் வசமாக மாட்டிக்கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் வவுனியா ஆச்சிபுரம் பகுதியில் நடந்துள்ளது.

மாடுகளுடன் சென்ற குறித்த வாகனம் விபத்துக்குள்ளானதால் வாகன திருத்தும் இடம் ஒன்றில் நிறுத்திவிட்டு கடத்திச் சென்ற இரண்டு மாடுகளையும் இறைச்சிக்காக விற்றுள்ளார்.

இதுதொடர்பில் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழிகாட்டலில் பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, மாடுகளைக் கடத்திய பிரதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதுடன், விபத்துக்குள்ளான வாகனமும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-25,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பிள்ளையார் கல்யாணம்!

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் தெரிவில் இணக்கம் எட்டப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்சியின் சார்பில் இதுவரை இருந்து வந்த நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனின் மறைவையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு தம்மை நியமிக்குமாறு ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்தபோதும், அது அங்கீகரிக்கப்படவில்லை. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனது மத்திய குழுவில் ஆராய்ந்த பின்னர் பதிலளிக்கும் என்று சாரப்பட தெரிவிக்கப்பட்டுள்ளது. ரெலோ, புளொட், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆகிய மூன்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொண்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்ட கட்சியாக இல்லாமையால், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெயரில் அந்தக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் அவை போட்டியிட்டன. நாடாளுமன்றத்திலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெயரிலேயே அவை இயங்கி வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா.சம்பந்தன், தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவுக்கு தலைமை தாங்கினார். ஆனாலும் வயோதிபம் காரணமாக இரா. சம்பந்தன் சார்பில், நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களில் எம்.ஏ.சுமந்திரனே பங்குபற்றினார்.

உள்ளூராட்சித் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனித்துப்போட்டியிடும் முடிவை எடுத்தது. அதனையடுத்தே ரெலோ, புளொட் என்பன தங்களுடன் ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பனவற்றை இணைத்து தம்மை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அறிவித்ததுடன், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியின் பெயரில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கும் வேட்பு மனுக்களைச் சமர்ப்பித்திருந்தன. ஆனாலும் இதன் பின்னரும், நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கீழேயே அவை இயங்கின. சபாநாயகரிடம், தாம் (ரெலோ, புளொட்) தனி அணி என எந்தவொரு அறிவிப்பும் வழங்காமல் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனின் கீழேயே அவை பயணித்தன. இந்த நிலையில் தான், இரா.சம்பந்தனின் வெற்றிடத்துக்கு தம்மை நியமிக்குமாறு ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் கோருகின்றார்.

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததையோடு நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில், அப்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியை தமக்குத் தருமாறு செல்வம் அடைக்கலநாதன் கோரியிருந்தார். கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியை 2015ஆம் ஆண்டிலிருந்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியே கைப்பற்றி வைத்திருந்தது. கூட்டமைப்பின் தலைமை மற்றும் பேச்சாளர் பதவி என்பன இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வசமிருந்த நிலையில், நியாயத்தின் அடிப்படையில் பேச்சாளர் பதவியை தமக்குத் தருமாறு ரெலோ கோர, இரா.சம்பந்தனோ 'இந்தா தருகின்றேன், அந்தா தருகின்றேன்' என்று சொல்லிச் சொல்லியே கடைசி வரையில் அதனை வழங்கவில்லை. இப்போது நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவிக்கும் அதேநிலைதான். 'நீங்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேறு அணியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளீர்கள். அப்படியான நிலையில் எப்படி உங்களுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைமையை தருவது?' என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியிருக்கின்றனர். அவர்கள் இந்தக் கேள்வியை இப்போது எழுப்பியிருக்கக் கூடாது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அவர்கள் பிறிதொரு கூட்டாக வேட்புமனுத் தாக்கல் செய்தபோதே எழுப்பியிருந்தால் அதில் தார்மீகம் இருந்திருக்கும். ஆனால் தங்கள் தேவைக்காக அவர்களையும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவுக்குள் வைத்திருந்துகொண்டு இப்போது தலைமையைக் கேட்டதும் அந்தக் கேள்வியைக் கேட்பது எந்தவகையில் நியாயம். கடைசியாக கூட்டமைப்புக்கு கிடைத்திருந்த பதவிகள், தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளுக்கு சம்பந்தனின் மறைவுக்குப் பின்னராவது கிடைக்குமென அந்தக் கட்சிகள் நம்பினால், அது பிள்ளையார் கல்யாணம் போல நடக்காமலே போய்விடும் என்பதே உண்மை.




# புலிகளின் துப்பாக்கியால் சுடப்பட்டாரா கிளப் வசந்த?

**கொழும்பு, ஜூலை 12**
**அத்துருகிரிய துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்ட இரு துப்பாக்கிகளில் ஒன்று விடுதலைப் புலிகள் பயன்படுத்தியதாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.**

அத்துடன், அத்துருகிய துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் காயமடைந்த நால்வரில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.
கிளப் வசந்தவின் மனைவி மற்றும் பச்சைகுத்தும் நிலையத்தின் உரிமையாளரின் மனைவி ஆகியோரின் நிலைமையே கவலைக்கிடமாக உள்ளது எனத் தெரியவருகின்றது.
மேற்படி சம்பவம் தொடர்பில் பொலிஸார் பலகோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். அதேவேளை, சமூகத்தில் உள்ள சட்டவிரோத துப்பாக்கிகளைக் கைப்பற்றுவதற்கான விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை பொலிஸாரால் முன்னெடுக்கப்படவுள்ளன. (ஒ-44)

## பேஸ்புக் மோசடி; நாட்டில் உயர்வு

கொழும்பு, ஜூலை 12
பேஸ்புக் மூலம் கூடுதல் வருமானம் ஈட்டலாம் என்று கூறி பணமோசடியில் ஈடுபடும் நடவடிக்கை அதிகரித்து வருகின்றது என்று தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக் குழுவின் பிரதிப் பணிப்பாளர் மேனகா பத்திரன தெரிவித்துள்ளார். தனிப்பட்ட தகவல் மூலம் பணத்தை முதலீடு செய்யும்போது, அந்தத் தொகை இரட்டிப்பாக தங்களது வங்கிக் கணக்கில் திரும்பச்செலுத் தப்படும் என்றும் மோசடிக்காரர்களால் தெரிவிக்கப்படுவதுடன் அதிகளவு பணத் தை முதலீடு செய்தால் 4 மடங்கு திரும்பக்கிடைக்கும் என்றும் தகவல் வழங்கப்பட்டு இந்த மோசடி இடம்பெறுகின்றது. நைஜீரியா போன்ற வெளிநாடுகள் ஊடாக இந்தப் பணமோசடி இடம்பெறுவதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. இதுதொடர்பில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்.
(ச-இ)

## மலையகப் பாடசாலைகளில் 60 'ஸ்மார்ட்' வகுப்பறைகள்

கொழும்பு, ஜூலை 12
இந்தியத் தூதரகத்தின் உதவியுடன் பதுளை, கண்டி, நுவரெலியா பிரதேசங்களில் 60 'ஸ்மார்ட்' வகுப்பறைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையை அமைச்சரவை அனுமதித்துள்ளது. க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்கள் இந்தத் திட்டத்தின் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச-25,6)

## கிராமங்களாக மாறுகின்றன மலையக லயன்கள்

கொழும்பு, ஜூலை 12
பெருந்தோட்டத்துறை மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட புதிய திட்டவரைவுக்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பெருதோட்டப் பிரதேசங் களில் தற்போது காணப்படும் தோட்ட வீடுகள் மற்றும் லயன்களை ஒன்றிணைத்து கிராமங்களாக மாற்றுவதற்கான திட்டவரைவுக்கே அமைச்சரவை அனுமதித்துள்ளது. (ப-6)

## ஹிருணிகாவின் பிணைமனு 15இல்

கொழும்பு, ஜூலை 12
சிறையில் அடைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, தம்மைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரித் தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் 15ஆம் திகதி விசார ணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.
தெமட்டகொடயில் டிபென்டர் வாகனத்தைப் பயன்படுத்தி இளைஞர் ஒருவரைக் கடத்தி, தாக்குதல் நடத்தியதுடன் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை உள்ளிட்ட 18 குற்றச்சாட்டு கள் சுமத்தப்பட்டுள்ள வழக்கிலே ஹிருணிகா பிரேமச்சந்திர குற்றவாளியாக சிறையிடப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

**நாளை**
13.07.2024
சனிக்கிழமை - ஆனி - 29
சுபநேரம் : 02.59 - 04.29
ராகுகாலம் : 08.59 - 10.29

**நாளொரு நல்வார்த்தை**
கடுமையான கஞ்சத்தனம், தகுதியற்ற தற்பெருமை, எல்லையற்ற பேராசை ஆகிய மூன்றும் மனிதனை வீணாக்கிவிடும். - முகம்மதுநபி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுபட்டால்தான் மீளமுடியும்



## சஜித் தெரிவிப்பு

**மன்னார், ஜுலை 12**

**நாடு வீழ்ந்துள்ள இக்கட்டான சூழ்நிலையில் இருந்து மீளவேண்டும். அவ்வாறு மீளவேண்டுமானால் முழு நாடும் ஒன்றுபட்டால்தான் இது முடியும். சிங்களம், தமிழ், முஸ்லிம், பறங்கியர் என பல்வேறு மதங்களை பின்பற்றும் மக்கள் சாதி, இனம், மதம் எனப் பிரிந்து செயற்பட்டால் நாட்டைக் கட்டியெழுப்புவது கடினமாகும் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

மன்னார் அல்மீனா கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த நாடு எல்லோருக்குமான நாடாகும். இது ஓர் இனத்துக்கோ, மதத்துக்கோ சொந்தமானது அல்ல.

சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்து மக்களுக்கும் உரித்தான இந்த நாட்டின் ஒற்றுமையே நாட்டின் பலமாக அமையவேண்டும். சகோதரத்துவம், நல்லிணக்கம், நட்புறவு என்பன எமது பயணமாக அமைந்து காணப்படவேண்டும்.

எமது நாட்டில் இனவாதத்துக்கும் மதவாதத்துக்கும் இடமில்லை. இனவாதமும் மதவாதமும் ஒரு புற்றுநோயாகும். ஒற்றுமையுடன் நாமனைவரும் இணைந்து வெற்றியை நோக்கிப் பயணிக்கவேண்டும் - என்றார். (ஒ-இ)

# மரண விசாரணை அதிகாரியாக பிரபானந்தன்



மன்னார், ஜுலை 12

மன்னார் மாவட்ட பிரதேச செயலக பிரிவின் உப அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் கிராமஅலுவலர் பிரிவுகளுக்கான நிரந்தர திடீர் மரண விசாரணை அதிகாரியாக சமூக சேவையாளர் பீ.பிரபானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவின் முஸ்லிம் விவகாரங்களுக்கான இணைப்பாளர் எஸ்.என். முஹம்மதினால் நியமனக் கடிதம் கொழும்பில் வைத்து அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. (ச-22-56)



# கூட்டுறவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜுலை 12

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய 102 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின நிகழ்வுகள் சங்க மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றன.

முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருலிங்கநாதன், சிறப்பு விருந்தினராக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரம் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் கூட்டுறவு ப் பணியாளர் மற்றும் அங்கத்தவர்கள் கௌரவிப்பு, பரிசில் வழங்கல் என்பன இடம்பெற்றன. (ச-17)

# அரிசி ஆலை திறப்பு

யாழ்ப்பாணம் ஜுலை 12

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அரியாலையில் அரிசி அரைக்கும் ஆலையுடன் இணைந்த உற்பத்தி நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டு நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் பங்கேற்று அதனைத் திறந்து வைத்தார். (ச-17)



# திருடர்கள் கைவரிசை; வாழ்வாதாரம் பாதிப்பு



கிளிநொச்சி, ஜுலை 12

அக்கராயனில் வர்த்தக நிலையங்களிலுள்ள பெறுமதிமிக்க பொருள்கள், தொடர்ச்சியாக இரவு வேளைகளில் களவாடப்பட்டு வருகின்றன. இதுதொடர்பில் முறைப்பாடுகள் செய்யப்பட்டபோதும் எவரும் கைது செய்யப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

திருடர்களின் கைவரிசையால் எமது நாளாந்த வியாபாரம் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. பொலிஸார் இதுதொடர்பில் கவனம் செலுத்தி சந்தேகநபர்களை கைதுசெய்வதுடன் திருட்டுகளையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ப-113)

# ஏற்று நீர்ப்பாசனத்துக்கு தடைநீக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஜுலை 12

ஏற்று நீர்ப்பாசன பயிர்ச்செய்கைக்கான நீரை விநியோகிக்குமாறு கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் உத்தரவிட்ட போதிலும் நீர் விநியோகிக்கப்படவில்லை என்று ஏற்று நீர்ப்பாசன செய்கையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தில் 100 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் தற்போது பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. மேட்டுப் பயிர்ச்செய்கையாளர் ஒருவருக்குரிய காணி வழியாக நீர் செல்லவேண்டும். அந்தக் காணி உரிமையாளர் நீர்செல்லவேண்டிய பாதையைத் தடை செய்ததையடுத்து இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம்.

அதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் ஏற்று நீர்ப்பாசன பயிர்ச்செய்கைக்கு நீரை விடுவிக்கும்படி உத்தரவிட்டார். எனினும் இதுவரை நீர் விநியோகிக்கப்படவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-13)

## முல்லை வீராங்கனைகள்

# குத்துச்சண்டையில் வெள்ளிப்பதக்கங்கள்

முல்லைத்தீவு , ஜுலை 12

48 ஆவது தேசிய விளையாட்டுவிழாவின் குத்துச்சண்டைப் போட்டியில் முல்லைத்தீவு வீராங்கனைகள் வெள்ளிப் பதக்கங்களை பெற்று சாதனையீட்டியுள்ளனர்.

விளையாட்டுத்துறை அமைச்சால் நடத்தப்பட்ட இந்த ஆண்டுக்கான தேசிய மட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கான குத்துச்சண்டைப் போட்டி கொழும்பு றொறிங்ரன் உள்ளக அரங்கில் கடந்த வாரம் நடைபெற்றது. இதில் வடமாகாண குத்துச் சண்டை வீராங்கனைகளாகக் கலந்துகொண்ட முல்லைத்தீவு மாவட்ட வீராங்கனைகளான மு.இந்துகாதேவி, எஸ். யஷ்மிதா ஆகியோரே வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று பெருமை சேர்த்துள்ளனர். (ச-22-13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்ளத்தில் சிவம் இருக்க இல்லத்தில் ஒளியிருக்கும்

# ஈழத்து இராமேஸ்வரம் (தான்தோன்றிஈஸ்வரர்)

## புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் தேவஸ்தானம்

## மகா கும்பாபிஷேக விஞ்ஞாபன சிறப்பிதழ் - 2024





## ஈழத்து இராமேஸ்வரத்தின் இறையருள் பொழிகின்ற பாணாவிடைப்பெருமான் குடமுழுக்கும் கும்பாபிசேக வரலாறும்

கே. ஈ. எஸ். உதயகுமார் (இலண்டன்)
(முன்னாள் செயலாளர், பொருளாளர்)

ஈழத்திருநாடின் எழில்கொஞ்சும் சப்ததீவுகளிலே சரித்திரப் புகழ்பெற்ற தீவு. கர்ணபரம்பரைக் கதைகளிலும் வரலாற்றுப் பார்வைகளிலும் பலநூறு பக்கங்களைக் கொண்டு முழுமையான வரலாற்றை நம்மால் அறுதியாகக் கூறமுடியாத நிலையிலே இருக்கின்ற அழகான தீவு.

கண்ணகியின் வரலாற்றுக்கு எவ்வளவு பழமையுள்ளதோ அதையும் விடப் பல உபகதைகளிலும் புகழப்படடு வருகின்ற தீவு. நான்கு பக்கமும் கடலால் சூழப் பட்டிருக்கும் சிறு கிராமங்களை மட்டுமே தீவு என்று அடையாளப் படுத்துகின்றார்கள் வரலாற்றாசிரியர்கள். ஆனால் இதுவோ யாழ் மாவட்டத்திற்கு மேற்கே ஏழுதீவுகளில் இயற்கை வளம் கொண்ட பூமியாக விளங்குகின்ற புங்குடுதீவைப் பற்றிப் பல புராண இதிகாசக் கதைகளில் குறிப்பிடப் பட்டிருந்தாலும் நமது வாழ்வுக்கும் வரலாற்றுக்கும் தென்பட்டவற்றையே இங்கே எழுத வேண்டியுள்ளது. சைவமும் தமிழும் தலைத்தோங்கி மங்கலமான வாழ்க்கை முறைகளிலே சிறந்து விளங்குவது புங்குடுதீவு.

தமிழர்களின் தோற்றமும் வரலாறும் என்ற பல நூல்களிலே தமிழர்கள் எவ்வளவு சீரும் சிறப்போடும் வாழ்ந்தவர்கள் என்பதை நாம் அறிய முடிகின்றது. முடியுடைய மூவேந்தர்களும் தமிழர்களுக்குரிய அகத்தையும் புறத்தையுமே பதிவுகளாகக் கொண்ட இலக்கியங்கள் இயம்பினாலும் அவர்களுடைய அறத்தாலும் மறத்தாலும் இந்த மண்ணுக்குரிய பண்பாடடுக் கலச்சார நாகரீகத்திலிருந்து இவர்கள் மாறிவிடவில்லை.

மூவேந்தர்களுடைய வரலாற்றுக்கு முன்பே கண்ணகியின் வரலாறு பரவிக் கிடந்தது. காவிரிப் பூம்பட்டினத்தை அலங்கரித்த வரலாற்றுக் காவியத்திலே தமிழ் மக்களுடைய முதற்காப்பியமாக சிலப்பதிகாரம் விரிந்துகிடக்கின்றது. ஆனால் அதையும் கிறிஸ்துவர்களுக்குப் பின்னால் இரண்டாம் நூற்றாண்டின் காலமாகக் கணிக்கப்பட்டிருப்பதையும் நாம் சிந்திக்காமலில்லை. இந்தப்பூமியில் எப்போது தமிழ் மாந்தன் தோன்றினானோ அன்றைக்கே தமிழர்களுடைய வரலாற்றுப் பெருமையை நாம் சரியாகக் கணித்துக்கொள்ள முடியாது திகைத்துக் கிடக்கின்றோம்.

அதுபோலவே தான் சப்ததீவுகளிலும் பல அதிசயங்களையும் சுயம்புகளையும் கொண்டிருக்கும் எமது போற்றுதலுக்குரிய தாய் மண்ணாம் புங்குடுதீவைப்பற்றியும் நமது அடுத்துவரும் சந்ததிக்கும் உணர்த்த வேண்டிய நோக்கோடுதான் இந்த வரலாற்று உண்மைகளை நாம் வெளிப்படுத்த எடுக்கின்ற முயற்சிக்கு ஆதரவுதந்து நிற்கின்ற அனைவருக்கும் எமது அன்பையும் நன்றியையும் பகிர்ந்து கொள்கின்றோம்.

புங்குடுதீவு பல புனை பெயர்களால் அழைக்கப்பட்ட போதிலும் பல வரலாற்றுக் காரணங்களை பலவிதமாகக் கூறிவருகின்றார்கள். ஆனால் இம் மண்ணிலே பிறந்து வளர்ந்த நாம் நமது முன்னோர்களுடைய வாய்வழிச் செய்திகளையும் இம்மண்ணினுடைய பாரம்பரியத்தையும் மறுத்துவிடமுடியாதல்லவா. அப்படியான நமது முன்னோர்கள் இம்மண்ணின் வாழ்வியலை அறிந்து மண்ணோடு மக்களாய் வாழ்ந்து அவர்கள் சொல்லிய எச்சசொச்ச வரலாறுகளையும் மறுத்துரைப்பது நமது முன்னோர்களுக்குச் செய்கின்ற துரோகமாகவே பார்க்கப்படும்.

தமிழர்களுடைய வரலாறுகளும் அடையாளங்களும் களவாடப் பட்டு யார் யாரோ எல்லாம் உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த கல்வியறிவுடையவர்கள் வாழுகின்ற காலத்திலே நாம் நமது மண்ணின் பழம் பெருமைகளை பகிர்ந்து கொள்வதிலே தவறுகள் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த மண்ணின் வாசத்துடனே விவசாயத்திலும் விளைச்சலின் பெரும்பங்கை ஏற்றுமதி செய்ததாலும் பொன் கொழிக்கும் இம்மண் பொன்கொடுதீவாக மாறிப் பின்னால் வழக்குமாறி புங்குடுதீவாக திரிபடைந்து நிற்கின்ற நிலைகளையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்ற கட்டாயத்திற்குள்ளே நிற்கவேண்டியுள்ளது. அதேசமயத்தில் புங்கு என்ற ஏராளமான மரங்களின் காரணப்பெயராகவும் வந்திருக்கலாம் என்பது ஆய்வாளர்களுடைய கருத்தாகவும் இருக்கின்றது.

தமிழர்களுடைய வாழ்க்கையிலே மிகப்பெரிய கண்டுபிடிப்பு விவசாயம் என்பதை எவராலும் மறுக்கமுடியாது. விவசாயத்தின் சிறப்பைப் பின்பற்றி ஆடுமாடுகள் வளர்ப்பதிலும் குடிசைக்கைத் தொழில்களையும் செய்து வாழ்ந்திருக்கின்றார்கள் இந்த மக்கள் ஆனால் மீன்பிடித் தொழிலைச் செய்யக் கூடியவர்கள் குடியேறிய பின்னால் மக்களோடு மக்களாக வாழ்ந்திருந்தாலும் விவசாயத்தைக் கைவிடாத மக்களே இன்றும் மண்ணை விட்டு வெளியேறாமல் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதையும் நம்மால் மறக்க முடியாது.

புங்குடுதீவில் அதிகமானவர்கள் சைவர்களாகவே வாழ்கின்றார்கள். இவர்களுடைய வரலாற்றின்படிக்கு ஆங்காங்கே பல கோயில்கள் அமைக்கப்பட்டு சைவப்பாரம்பரியத்தை விட்டுக் கொடுக்காதவர்களாகவும் விவசாயத்தையும் வியாபாரத்தையும் வளர்ப்பதிலும் அதிக அக்கறையுடையவர்களாகவே வாழ்ந்தார்கள் என்பது வரலாறு. ஆனால் பல காலங்களின் பின்பு பலருடைய வரலாறும் பல . தொழில் சார்ந்து வாழக்கூடியவர்களாகவும் இருந்திருக்கின்றார்கள் என்பதும் மறுக்க முடியாத தொன்றாகும்.

சைவமும் தமிழும் தழைத்தோங்க வித்துவான்களும் பண்டிதர்களும் பலநூற்றுக்கணக்கான ஆசிரியர்களும் தமது மக்களை கண்ணும் கருத்துமாக வாழ்வுக்கு வழிகாட்டி நின்றார்கள் என்பதை நமது பாடசாலைகளின் வரலாற்றுக் குறிப்புகளில் இருந்து காணமுடிகின்றது. இருபதாம் நூற்றாண்டுக்கு முன்பாகவே நமது மக்களுடைய வாழ்க்கை என்பது சிவவழிபாட்டினை முன்னிறுத்தி வாழ்ந்திருப்பதையே சுட்டிக்காட்டுகின்றது.

கல்வியின் மேம்பாட்டிலே சிறந்துவிளங்கிய ஆசிரியப் பெருந்தகையினர் தங்களுடைய வரலாற்றுக் குறிப்புகளிலும் தங்களுடைய பணிக் காலங்களிலும் புங்குடுதவீ எத்தனை பெருமைகளோடு தலைநிமிர்ந்து நின்றதைச் சுட்டிக்காட்டியிருப்பதையும் நாம் மறப்பதற்கில்லை. ஆனால் அவையாவும் பின்னால் வந்தவர்களுடைய அக்கறையின்மையினால் பல வரலாற்றுக் குறிப்புகளை நாம் இழந்துவிடடோம் என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை. அத்தகைய அருமைமிக்க மண்ணிலே பல சிவாலயங்களும் முருகன் விநாயகர் கண்ணகை அம்பாள் போன்ற ஆலயங்களின் வரலாற்றுக் குறிப்புகளிலும் நாம் மக்களுடைய சமூக சமுதாய வாழ்வியலைக் கவனிக்க முடிகின்றது. அத்தகைய சிறப்புக்களைக் கொண்ட இம்மண்ணிலே பாணாவிடைச்சிவன் தேவஸ்தானத்தின் வரலாற்றுப் பதிவையும் இவ்வாலயத்தின் பணிகளின் நிமித்தமாக அன்றைய இளைஞர்கள் ஒன்றுபட்டு ஆலயத்தின் நிர்மாணப்பணிகளிலே எவ்வாறு தங்களுடைய பங்களிப்புகளைச் செய்து தமிழையும் சைவத்தையும் பாதுகாக்க வேண்டும் என்ற அர்ப்பணிப்புகளிலே பாரிய முன்னேற்றங்களைக் கண்டிருக்கின்றார்கள் என்றால் அதுவே வரலாற்றின் சிறப்பாகிறது.

இவ்வாலயத்தின் வரலாற்றினை நாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து பலவிடயங்களை ஆழ்ந்துரைக்க வேண்டிய நிலையில் உள்ளது. எமது மண்ணில் வாழ்ந்த மக்களுடைய வரலாற்றிலே நடந்த உண்மைச் சம்பவத்தை நாம் அறிந்தபோது அங்கே பல அதிசயமான விடயங்களை கவனிக்கமுடிந்தது.

இந்தியாவிலும் இலங்கையிலும் சைவமும் தமிழும் தழைத்திருந்தகாலத்திலே நமது மண்ணை நோக்கி கடல் வழியாக வந்து சேர்ந்த பல தெய்வசக்தியுடைய திருவுருவச்சிலைகள் யாழ்பாண நகரத்தின் சுற்றாடலில் அமைந்திருக்கும் பல ஆலயங்களிலே இத்தகைய அற்புதங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதையும் நாம் காணமுடியும். இதுபோல எமது புங்குடுதீவிலே ஊரதீவுப்பகுதியில் வாழ்ந்த சிவபக்தர் ஒருவருக்கு உக்கிரமான அருட்கலை உருவானது. அந்தக்கலையின் உக்கிரத்தினால் கடலைநோக்கி ஓடினார். அந்த அடவிலி ஆற்றிலே மூழ்கியபோது அவருடைய கைகளிலே பெரியகல் ஒன்று அகப்பட்டது. அந்தக் கல்லை அவர் கொண்டுவந்து மாவிலங்கு விருட்சத்தின் கீழ் வைத்தார். அதனை மீண்டும் தூக்க முற்படட்வேளையில் அக்கல்லை தூக்கமுடியாமல் போனதாகவும் மீண்டும் ஊர்மக்களுடைய உதவியோடு அதனை நகர்த்த பல முயற்சிகள் எடுதத்போதும் அதனை அசைக்க முடியாமல் போனது. அந்த தெய்வீக சக்தியு டைய கல்லை தெய்வமாக ஏற்றுக்கொண்டு ஊர்மக்கள் அவ்விடத் திலே ஒரு கோவிலை உருவாக்கியதாகவும் இவ் ஆலயவழிபாட்டுக் குறிப்புகளில் காணப்படுகின்றது. இந்தக்கல் வைக்கப்பட்ட புனிதமான இடத்திலே மாவிலங்கு விருட்சம் ஆலயத்தின் மூலஸ்தானத்திற்கு பின்பகுதியில் இன்னமும் உயிர்ப்புடன் காணப்படுகிறது. அந்த மரத்தடியிலே அமர்ந்த இலிங்கத்திற்கு ஒரு குடிசை அமைத்து ஆலயமாக வழிபாடு செய்து வரலாயினர். அன்றைய காலங்களிலே எல்லைகளைக் காத்து நிற்கின்ற தெய்வங்களைக் காவல்தெய்வம் என்றே கருதுவார்கள். இந்தக்கல்லையும் அவ்வாறு நினைத்து அந்த இலிங்கத்தை ஐயனார் என்று அழைக்கத் தொடங்கி அதற்குரிய பூசைகள் புனருத்தாரணங்களைச் செய்து நம்பிக்கைக்குரிய இஸ்டசித்திகளை அள்ளி வழங்கும் காவல் தெய்வம் ஐயனார் என்றே வழிபாடுகள் செய்து வந்தார்கள். இந்த நிலைமை பல நூற்றாண்டுகாலங்களாக நடைபெற்று வந்தது.

எமது ஆலயத்தின் பழமையையும் பெருமையையும் போற்றதக்கதாக ஆலயமுன்றலிலே பலநூற்றாண்டு காலங்களுக்கு முன்பாக இருந்த அரசமரமும் மருதமரமும் இன்றும் தலைநிமிர்நிற்கின்றன என்பதை நாம் பார்க்க முடியும். ஆனால் இராஜகோபுரம் அமைக்க முற்பட்டவேளையில் அத்திவாரத்தினூடாக ஊறிய உவர்நீரின் பாதிப்பினால் அந்த அழகிய அரசமரம் படிப்படியாக பட்டுபோனது. அத்தனை பழங்காலப் பெருமைகளோடு நமது ஊரும் ஆலயமும் நம் உணர்வோடு கலந்து நிற்பதனால் இதனைப் பாதுகாத்து இவ்வாலயத்தின் தெய்வீகவாசனையை உலகம்முழுவதும் சுவாசிக்க வேண்டியவர்களாக நாம் மாறவேண்டும்.

1910ம் ஆண்டிலே மருதப்புசாமியார் இவ்வாலயத்தை சிவாலயமாக நாமகரணம் சூட்டி சகல பூசைகளையும் பயபக்தியோடு நடாத்தி வந்தார்கள் என்பதே இன்றைய வரலாறாகக் காணப்படுகின்றது. மருதப்பர் அவர்கள் இலங்கையில் இருந்து இந்தியாவுக்குச் சென்று இராமேஸ்வரத்திலே தங்கியிருந்தார். இராமேஸ்வரத்திலே இராமர் தன்னுடைய எண்ணங்கள் நிறைவாக வேண்டும் என்று அவ்விடத்திலே ஒரு ஆலயத்தை அமைத்தார் என்றும் இவ்வாலயத்தில் மண்ணிலே சிவலிங்கங்களைச் செய்து வழிபாடியற்றியதாகவும் கூறப்படுகின்ற கர்ணபரம்பரைக் கதை இன்னும் அப்பகுதி மக்களிடம் நிலவி வருகின்றது. மருதப்பர் என்பவர் இராமேஸ்வரத்திலே இராமரால் ஸ்தாபிக்கப்பட்டு வழிபாடு செய்துவந்த அவ்வாலயத்தை தானும் வழிபட்டு வரலானார். தினமும் காலை மாலை வழிபட்டு வந்ததால் அவருடைய மனம் இந்த ஈஸ்வரனையே வழிபடுகின்ற வழக்கத்தையுடையதாக மாறியது. இறைவனிடத்திலே வைத்த பக்தியும் அன்பும் இவரை வேறு எந்த இடங்களுக்கும் போகவோ தங்கி இருக்கவே முடியாத ஒரு தீவிரமான பக்தராக மாறிவிட்டது. இவ்வாறு பலகாலங்களாக வழிபட்டு வந்த மருதப்பசுவாமிகளுக்கு கனவிலே எல்லாம் வல்ல ஈஸ்வரனார் தோன்றி "அப்பனே உன்னுடைய நாட்டிலே உனது ஊரிலே நாம் எழுநத்ருளியிருக் கின்றோம் நீ அங்கே சென்று எனக்கு ஆற்ற வேண்டிய பணிகளைச் செய்யக் கடவாய்" என்று தரிசனத்திலே சொல்லப்பட்டது. நாளாந்தம் இவரால் பூசிக்கப்பட்டு வந்த எம்பெருமானை விட்டு இலங்கைக்கு திரும்பி வரவும் முடியாமல் பெரும் மனக்குழப்பத்திலே இருக்கவேண்டிய சூழல் ஏற்பட்டது. இறைவனுடைய வேண்டுதலை ஏற்காமல் இருப்பது சிவ வழிபாடிற்கு தீங்காகிவிடுமே என்ற எண்ணதத்டன மருதப்பசுவாமிகள் இலங்கைக்குப் புறப்பட்டு வந்தார்கள்.

புங்குடுதீவுக்குச் சென்று தனக்குக் கிடைத்த தரிசனத்தின் படிக்கு அந்த சிவலிங்கத்தை ஊர்மக்களுடைய உதவியோடு கண்டு கொண்டார். அளவற்ற மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடைந்தார். அந்த இலிங்கத்தைப் பெயர்த்து வேறு இடத்திலே அமைக்கலாம் என்று பல முயற்சிகளிலே ஈடுபட்டார்.அது முடியாமல் போனது. தான்தோன்றியாகவும் சுயம்பாகவும் இருக்கின்ற இலிங்கத்திலே எழுந்தருளி சகல விக்கினங்களையும் தீர்த்து வருகின்ற நிலையை உணர்ந்து அவ்விடத்திலே அமைக்கப்பட்ட ஆலயமே பாணாவிடைச்சிவனார் திருத்தலமாக இன்று வானளாவிய கோபுரத்தோடு எழுநத் காடசியளிக்கின்றது என்றால் இதனுடைய அருடச்க்தியை எம்மால் விதந்து உரைக்கமுடியாது. இவ்வாலயத்தை பிரமாண்டமாக அமைப்பதற்கு இறைவனுடைய திருவருளால் ஆட்கொள்ளப்பட்ட தாராளசிந்தையுடைய தவத்திரு முத்தர் என்ற சிவனடியார் பெருநிலப்பரபுக் காணியை வழங்கியதால் இவ்வாலயம் மிகச்சிறப்பாக அமைக்கப் பட்டுள்ளது. அதன்காரணமாக முதலாவது திருவிழாவுக்குரிய உரிமையாளராக முத்தர்குடும்பம் இருந்துவருகின்றது. மருதப்பருடைய கண்காணிப்பின் கீழ் சிவன் ஆலயமாகப் பரிணமித்து பலஆண்டுகளாகவும் மக்களுடைய துன்பங்களை நீக்கி திருவருள் பாலித்து வருகின்ற எம்பெருமானின் திருவிளையாடல்களை உணர்ந்து ஊர்மக்கள் அனைவரும் இணைந்து ஒரு ஆலயத்தை அமைத்துள்ளனர். மருதப்பர்சுவாமிகளின் சகோதராகிய மாரிமுத்து அவர்களுடைய புதல்வாரன ஆறுமுகம் என்பவர் ஆலயத்தின் நிர்வாகத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார். அவர்களுடைய மேற்பார்வையின் கீழ் எம்பெருமானுக்கு ஒரு நிரந்தரமான ஆலயம் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. அந்தச்சமயத்தில் மருதப்பசுவாமிகளுடைய உதவியாளராக அ.கு. மதியாபரணம் என்பவர் இறுதிவரையும் செயற்பட்டார் என்பது அறியக்கிடக்கின்றது. இவ்வாலயத்தை நிர்மாணிப்பதற்காக அடவரி ஆற்றங்கரைக்கு

தொடர்ச்சி மறுபக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளங்களில் எடுத்துவரப்பட்ட வெள்ளை வைரக்கற்களை வண்டிலிலே ஏற்றி வே.முத்துவேலு அ.அம்பலவாணர் சி.முருகேசு கு.வேலாயுதம். சோமர் துரையப்பா. ஆகியோர் இவ்விடத்திற்கு கொண்டுவந்தார்கள். இவர்களுடைய ஒத்துழைப்போடு இவ்வாலயம் ஆசாரிகளின் ஆலோசனைப்படி வெள்ளை வைரக்கற்களினால் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு அழகுறக் காட்சியளிக்கின்றது. ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சுண்ணாம் புக்கற்களால் இருப்பிடங்கள் கட்டுவித்து 1948ம் ஆண்டு பங்குனி உத்தர தினத்தன்று கோப்பாய் சிவஸ்ரீ வைரவநாதக் குருக்களின் தலையில் மகாகும்பிசேகம் செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து திருவிழாக்களும் பத்தாம் நாள் நிறைவிலே திருநாவுக்கரசர் குருபூசையும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அத்தினத்தன்று இவ்வாயத்தின் பெரும்பணிக்குக் காரண மாக பணியாற்றிய ஆலயநிர்வாதின் சார்பாக சிவஸ்ரீ வைரவநாதக் குருக்களுடைய ஆசியோடு மருதப்புசுவாமிகளுக்கு பொன்னாடை போர்த்தி சிவக்கன்று என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார்கள். இவ்வாலயத்தின் நித்திய நைமித்திய பூசைகளை மிகச்சிறப்பாகச் செய்யவேண்டும் என்பதற்காக இந்தியாவிலிருந்து சிவஸ்ரீ மு.இராமச் சந்திரன் சர்மாவை அழைத்து வந்து நிரந்தரமான ஆலயப்பூசகராக நியமிக்கப்பட்டார். அவருடைய பிள்ளைகளான சுந்தராம்பாள்அம்மா. மீனாம்பாள்அம்மா. இராமலிங்கசர்மா ஆகியோர் இவ்வாலயத்தின் பூசகருக்கு உதவியாக இருந்து வந்தனர். சிவஸ்ரீ இராமசந்திர சர்மா இறந்தபின்பு அவருடைய மருமகனான சிவஸ்ரீ நடராசா சர்மா ஆலயப் பூசகராகக் கடமையாற்றி வந்துள்ளார்கள். இவர்களுடைய இறைப் பற்றும் அயரா உழைப்பினாலும் இவ்வாலயத்தின் செயற்பாடுகளும் நேர்த்தியாக இடம்பெற்று வந்தது. இவர்களுடைய குடும்பமும் எம்பெருமானுடைய திருவருளால் இன்றும் சிறப்பாக வாழ்ந்து வருவதாக அறியமுடிகின்றது.

புங்குடுதீவு மக்களுடைய சைவப்பாரம்பியத்தின் பிரகாசமாகவும் விளங்கிச் சிவப்பணியிலே தன்னை அர்ப்பணித்து நின்ற போற்றுதலுக் குரிய மருதப்பசுவாமிகளுடைய அர்ப்பணிப்பிலே "உன்செயல் அல்லாது யாதொன்று மில்லை இறைவா என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற திருநாவுக்கரசருடைய வாக்கிற்கிணங்க சைவத்திற் கும் தமிழுக்கும் சிவப்பணியாற்றிவந்த சிவஸ்ரீ சிவக்கன்று மருதப்ப சுவாமிகள் 1960ம் ஆண்டளவிலே பாணாவிடைச் சிவனாரின் பாதக்கமலங்களிலே சமாதியடைந்தார்கள். இவருடைய சிவப் பணியை அடிப்படையாகக் கொண்டு ஈழத்து இராமேஸ்வரம் உலக மெலாம் பரிணமித்து நிற்கின்ற எமது ஆலயத்தின் அருகாமையிலே சிவக்கன்று மருதப்பசுவாமிகளின் சமாதி திரு.ச.தம்பிப்பிள்ளை அவர்களுடைய காணியில் அமைக்கப் பட்டிருக்கின்றது. அவருடைய சமாதிக்கும் திரு.க.சுப்பிரமணியம். மயில்வாகனம் அவர்கள் செய்துவந்த பணிகளை திரு சோ.மணிவண்ணன் செய்துவருகிறார். திருவிளக்கேற்றி வழிபாடுகள் செய்கின்ற ஏற்பாடுகளிலே ஆலய நிர்வாகமும் மிகுந்த கரிசனை கொண்டியங்கி வருகின்றது. உலகப் புகழ்பெற்ற ஆலயங்களிலே ஈழத்துஇராமேஸ்வரம் தலைநிமிர்ந்து நிற்கின்ற பாணாவிடைப்பெருமானுடைய வரலாற்றின் பக்கங்களிலே சிவக்கன்று மருதப்பசுவாமிகள் நீங்காத இடத்தைப்பிடித்து இறைவ னுடைய திருவடிநிழலிலே வாழ்ந்துவருகின்றார்.

அதன்பிற்பாடு அ.கு. மதியாபரணம் என்னும் சிவனடியார் தன்னுடைய பணியை ஆலயத் திற்கு தொடர்ந்து நடாத்தி வந்தார்கள். க.அம்பலவாணர் என்பவர் தன்னுடைய தாயாரின் ஞாபகார்த்தமாக எம்பெருமான் திருவீதி எழுந்தருளி உலாவருவதற்குரிய சகடை ஒன்றை உபயமாக வழங் கினார். ஆலயத்தின் நலன்கருதி உட்பிரகாரத்தில் அமர்ந்திருந்த ஐயனார் திருவுருச்சிலையை 1964ம் ஆண்டளவில் ஆலயத்தின் வெளிப்புறத்தில் நிரந்தரமாக நிறுவப் பட்டுள்ளது. அத்துடன் ஐயாரின் எழுந்தருளி விக்கிரகத்தையும் திரு.சு.குமாரசாமி என்பவரால் உபயமாக வழங்கப்பட்டுள்ளது. அக்காலகட்டத்தில் ஆலயத்தின் நிர்வாகசபைத் தலைவராக அமரர் திரு. நா. இ. அருணாச்சலம் அவர்கள் மேற்கண்ட காரியங்களுக்கு ஆதரவு வழங்கியுள்ளார்.

1965ம் ஆண்டு ஆசிரியமணி செ. இலகுப்பிள்ளையவர்கள் ஆலயநிர்வாக பொறுப்பினை ஏற்றுக்கொண்டபிறை கொழும்பு அருள் நெறிமன்றத்தின் தலைவராக செயற்பட்டுவந்த ந.ம.நடராசா வர்த்தகர் ஆறாம் திருவிழாவை முன்னின்று நடாத்தினார். அத்துடன் 1969ம் ஆண்டிலே மாணிக்கவாசகரின் திருவுருச்சிலை செய்வு ஆலயத்திலே பிரதிஸ்டை செய்தார்கள். இவ்வாலயத்திலே அடியவர் களின் தேவை கருதி 1970ம் ஆண்டு நவக்கிரக ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. மடப்பள்ளி, களஞ்சியறை,காரியாலயம். சுற்று மதில்கள் யாவும் புதுப்பித்து புனரமைக்கப்பட்டது.

1973ம் ஆண்டு சித்திரவேல் (திருகோணமலை)அவர்கள் ஆலயத் தின் உள்வீதியில் எம்பெருமான் எழுந்தருளி உலாவருகின்ற மஞ்சத்தை உபயமாகச் செய்து வைத்துள்ளார். தற்பொழுது செ. மகாலிங்கம் அவர்களால் புனரமைக்கப்பட்டு திருவிழாக் காலங்களில் அந்த மஞ்சத்திலே எம்பெருமான் பவனிவருகின்றார். எல்லாம் வல்ல பாணாவிடைச்சிவனின் திருவருளினால் 1980ம் ஆண்டளவில் இவ் வாலயத்திற்குரிய இரண்டாவது மகாகும்பாபிசேகம் மிகச்சிறப் பாக நடைபெற்றது. எமது ஆலயத்திலே முழுமுதற்கடவுளாக விளங் கும் விநாயகப்பெருமான் ஆலயத்தை புங்குடுதீவு 3ம்வட்டா ரத்தைச்சேர்ந்த கொழும்பு பிரபலவர்த்தகர் திரு .த. இராசலிங்கம் அவர்கள் அமைத்துத்தந்தார்கள். யாழ்ப்பாண வர்த்தகரான திரு பொன். தருமரட்ணம் அவர்கள் முருகன் ஆலயத்தை உருவாக்கி தந்துள்ளார்கள். இவர் எமது ஆலயத்தின் பூங்காவனத்திருவிழாவின் உபயகாரராக இருக்கின்றார். சுன்னாகம் வர்த்தகராகவும் பாணாவிடைப்பெருமான் ஆலயத்தின் தேர்திருவிழா உபயகாரரான இளையதம்பி பொன்னுத்துரை அவர்கள் சண்டேஸ்வரர் ஆலயத்தை அமைத்துக்கொடுத்துள்ளார். இக்கும்பாபிசேகப் பெருவிழா சிவஸ்ரீ மு. பரமசாமிக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கால கட்டத்தில் ஆலயத்தின் நிர்வாகசபைத் தலைவராக ஆசிரியமணி திரு. செ. இலகுப்பிள்ளை, சட்டத்தரணி திரு எஸ்.கே. மகேந்திரன், ஆசிரியர் திரு ந. இராஜதுரை அவர்களும் இணைந்து இக் கும்பாபிசேகத்தை நடாத்தி வைத்தனர். எஸ்கே.மகேந்திரனின் தலைமையில் 1983ம் ஆண்டு மடப்பள்ளியிலிருந்து அம்மன் ஆலயம்வரை கொட்டகை அமைக்கப்பட்டது. 1983ல் புங்குடுதீவின் பிரதான போக்குவரத்துத்து வீதியிலே அமைந்திருந்த பழையதுறை என்னுமிடத்தில் பாணா விடைச்சிவனை நினைவுபடுத்து முகமாகஒரு சிறிய வைரவர்ஆலயம் அமைந்திருந்தது. அவ்வாலயத்திலிருந்து பாணாவிடைச்சிவனார் ஆலயத்திற்கு செல்லும் பிரதான பாதையாக வடகரை அமைப்பாக விளங்கியது. இந்தப்பாதையை பல சிரமங்களுக்கு மத்தியில் புங்குடு தீவு இளந்தமிழர் மன்றத்திலுள்ள இளைஞர்களின் அயரா உழைப்பினால் இப்பாதை அமைக்கப்பட்டது. இதனை புங்குடுதீவு இளந்தமிழர் மன்றத்தின் தலைவர் எஸ் கே மகேந்திரனின் தலைமையிலும் செ.உதயகுமாரின் வழிகாட்டலிலும் க.சிவஞானவரன், ச. சிவபாலன் ஆகியோருடைய ஒத்துழைப்போடும் அமைக்கப்பட்டது. அந்த பாதை தற்பொழுது அரசமேற்பார்வையில் வடகரை அணை யாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை அங்குசென்றுவருகின்ற ஒவ்வொருவரும் காணக்கூடியதாக அமைந்திருக்கின்றது.

1976ம் ஆண்டு ஆலயத்தில் அ.ப.பாலசுப்பிரமணியம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தீர்த்தக் கேணியானது சில மாதங்களில் பழுதடைந்த காரணத்தினால் 1986ம் ஆண்டு மீண்டும் புனரமைக்கப்பட்டது. இந்த புனரமைப்பை சிரமேற்கொண்டு தலைவராக இருந்த திரு எஸ். கே. மகேந்திரன் அவர்களும் உபதலைவராக இருந்த செல்லத்துரை உதயகுமார் அவர்களும் திருக்கேணியின் புனரமைப்பை முன்னின்று செயற்படுத்தி முடித்தனர். 1987ம் ஆண்டளவிலே இவ்வாலயத்தின் நிர்வாக சபைத்தலைவராக டாக்டர் பேரின்பநாதன் தலைமை யேற்றார்.அப்போது ஆலயத்தின் தேர்த்திருப்பணி சபை உருவாக் கப்பட்டது. தேர்த்திருப்பணித் தலைவராக திரு டாக்டர் பேரின்பநாதன். செயலாளர் பொன் வைரமுத்து அவர்களும் பொருளாளராக இ. வைத்திலிங்கம் (விதானையார்) செயற்பட்டார்கள். தேர்ப்பணிக்கான செயற்பாடுகளை 1987ம்ஆண்டு ஆவணி மாதத்திலே அதற்கான பணிகள் ஆரம்பமாகியது. இந்தத் திட்டங்களைத் நடைமுறைப் படுதற்காக திரு செ. உதயகுமார் அவர்கள் நிர்வாக கட்டமைப்பு களுக்குரிய பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். இவர் இந்தியாவுக்குச் சென்று பலகாலம் தங்கியிருந்த காலத்திலே மருதப்பசுவாமிகளின் நினைவுகளை சுமந்தவராக இராமேஸ்வரத்திலமைந்துள்ள சிவன் ஆலயத்தை வழிபடச்சென்றார். அந்த ஆலயத்தின் அமைப்புகளும் நினைவுகளும் பாணாவிடைப்பெருமானின் நினைவலைகளையும் இவருடைய மனதிலே பலவிதமான சிந்தனைகளையும் ஏற்படுத்தி யது. இந்த உணர்விலே மருதப்பசுவாமிகளின் இறைதரிசனத்தையும் அருட்பிரவாகத்தையும் சுமந்து நிற்கின்ற பாணாவிடைச்சிவன் திருத் தலத்திற்கு எல்லோருடைய ஏகோபித்த வேண்டுதலாக ஈழத்து இராமேஸ்வரம் என்ற திருப்பெயரைச் சூட்டி தொடர்ச்சியான திருப்பணி களையும் செய்து வருகின்றார். எமது ஆலயத்திற்கான தேர்செய் வதற்கு தமது வீட்டில் வளர்ந்த வேப்பமரத்தை காணிக்கையாக தந்தார்கள். இப்பெயரானது இன்று உலகஅளவிலே பேசுபொருளாக இருந்து வருவதை ஆலயத்தின்பால் இணைந்து வருகின்ற பக்தகோடி கள் அனைவருக்கும் மனதிலே பெரும் மகிழ்ச்சியையும் பக்திப்பிர வாகத்தையும் சொரிந்து கொண்டிருக்கின்றது என்பதை அறிய முடிகின்றது. சுவிற்சலாந்து நாட்டிலே வாழ்கின்ற எமது உறவுகளான திரு நா. ஜெயக்குமர் ( பாபு) ப. இராஜகோபால் ஆகியோரது நிதிச்சே கரிப்பின் மூலம் கிடைத்த நிதியைக்கொண்டு 1989ம் ஆண்டு ஆலயத்தின் தேர்த்திருப்பணி வேலைகளுக்கு அடித்தளம் அமைக்க பட்டது என்பதை இங்கு நினைவுபடுதத்துவதில் மகிழ்ச்சியாகவுள்ளது. இவ்வாலயத்தின் நிர்வாகப்பொறுப்பிலிருந்த ஆ. பேரின்பநாதன் தலைமையில் அன்னதானமடம். பூசகருக்குரிய வீடும் நிர்மாணிக்கப் பட்டது.அத்துடன் யோகம்மா (கொழும்பு வர்த்தகர்) 1990ம் ஆண்டிலே ஜெனறேட்டர் ஒன்றை அன்பளிப்பாக வழங்கி ஆலயத்திற்கு மின்னொளி ஏற்றிவைத்தார்கள். அதுமட்டுமன்றி 1960ல் ஆலயத்தின் வடபகுதியில் அமைந்துள்ள தண்ணீப்பந்தலையும் இவர்களே நிர்மாணித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.அந்த தண்ணீர்ப்பந்தலில் அடியார்களின் தாகம் தீர்ப்பதற்காக இன்றுவரையும் தண்ணீர சி.முருகேசு. அருணாசலம். சி. கந்தையா அவர்கள் 112வருடங்களாக வழங்கிவருகின்றார்கள். ஆலயத்தின் தென்கிழக்குப் பகுதியிமைந் துள்ள தண்ணீப்பந்தலுக்கு 112வருடங்களாக மாணிக்கம் குடும்பத்தினர் அடியவர்களுக்கு தண்ணீர்வழங்கி வருகின்றார்கள். மாணிக்கம் என்பவருடைய பேரன் டாக்டர் ஆ. பேரின்பநாதன் அவர்கள் ஆலயத்திற்காக நிரந்தரமான தண்ணீப் பந்தலை அமைத்துக் கொடுதத்துள்ளார். எமது ஆலயத்தின் அமைந்துள்ள பார்வதியம்பாளின் ஆலயத்திருக்கதவினை திரு.திருமதி பத்மநாதன் இலட்சுமி அவர்கள் நன்கொடையாகச் செய்துதந்தார்கள்.

1991ம் ஆண்டிலே திரு வைத்திலிங்கம் விதானையார் அவர்கள் எம்பெருமானின் ஜோதிமயமாகப் பிரகாசிக்கும் தன்மையுடைய அணையாவிளக்கு தீபத்தினை ஏற்றிவைத்துள்ளார். அந்தவிளக்கு இன்னமும் பிரகாசமாக ஒளிர்ந்து வருவதற்குரிய சகஏற்பாடுகளையும் அவர்களுடைய குடும்பசார்பாகச் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை அனைவரும் அறியமுடிகின்றது. அதன்பின்பு நாட்டின் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்தார்கள். அதனால் ஆலயத்தின் சகலபணிகளும் முடங்கிப்போனது. அக்காலத் திலே சின்னையா சிவலிங்கம் அவர்கள் ஆலயத்தின் பூசைகளை நடாத்தி வந்தார். அவ்வேளை நாகநாதபிள்ளை ஜெகதீசன் என்பவரும் ஆலயத்தைப் பாதுகாத்துவந்தனர்.

1996ல் நாடடில் ஊர் திரும்பிய ஆலயத்தின் பொருளா ளரான ஆசிரியர் திரு.ந.இராஜதுரை அவர்கள் ஆலயத்தின் நிர்வாக ஒழுங்குகளை வழிநடாத்தி வந்தார். அதனைத் தொடர்ந்து டாகடர் ஆ. பேரின்பநாதனும் ஊர்திரும்பிய பின்பு ஆலயம் சிவஸ்ரீ பரமசாமிக்குருக் களால் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அச்சமயம் செயலாளராக செயற்பட்ட கந்தசாமி என்பவர் கொழும்பிலே தங்கியிருந்தமையால் பொன் வைரமுத்து அவர்கள் ஆலயத்தின் செயலாளர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அதன்பின்பு உள்ளூரில் வாழ்ந்த வர்த்தகப் பெருமக்கள் உதவியோடும் வெளிநாட்டில் வாழ்ந்த ஊர்மக்களுடைய உதவியோடும் 2002ம் ஆண்டு பங்குனிமாதம் சிவஸ்ரீ மு. பரமசாமிக்குருக்களின் மேற்பார்வையின் கீழ் மகாகும்பாபிசேகம் செய்யப்பட்டது.ஜெர்மனியை வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்துவந்த திரு நாகலிங்கம் பத்மநாதன் அவர்கள் எல்லாம்வல்ல எம்பெருமானு டைய ஆலயத்திலே உள்வீதியிலே அமைந்துள்ள கிருஸ்ணர் ஆலயத்தை அழகுறக்கட்டிக்கொடுக்க முன்வந்தார்கள். அதுமட்டு மன்றி இன்றுவரைக்கும் எம்பெருமானுடைய தேர்த்திருவிழா உபயகாரராக இருந்துவருகின்றார்கள்.2004ம் ஆண்டு எம்பெருமான் திருவருளினால் உருவாக்கப்பட்ட 34அடிஉயரமுடைய சித்திரத்தேர் எமது ஆலயத்தின் திருவீதிகளிலே வெள்ளோட்டம் செய்யப்பட்டது. அப்பொழுது திரு குருநாதபிள்ளை (சிவா நிறுவனப்பூங்கா யாழ்ப்பா ணம) திருநாவுக்கரசநாயனாரின் திருவுருவ வெங்கலச்சிலையை ஆலயத்தில் பிரதிஸ்டை செய்து வழிபாடுகளைத் தொடர்ந்தனர். பாணாவிடைப்பெருமான் பார்வதியம்பாள் சமேதரராய் எழுந்தருளி திருவீதி உலாவரும் அழகிய காராம்பசு வாகனத்தை சண்முகநாதன் பவளராணி அவர்கள் செய்துகொடுத்திருந்தார்கள்.

2005ம் ஆண்டு பொன் வைரமுத்து அவர்களுடைய தலைமையில் தேர்முட்டி (தேர்காப்பகம்) அமைக்கப்பட்டது. அத்துடன் 2012ம் ஆண்டிலே சுவிற்சலாந்து நாட்டிலுள்ள திரு நாகராசா ஜெயராஜன் (வேணு) என்பவர் ஆலயத்திற்காக பார்வதியம்பாள் ஆலயமுன் றலிலிருந்து வசந்தமண்டபம்வரைக்கும் அமைக்கப்பட் கொட்ட கையை தாங்ளுடைய உபயமாக அமைத்துக் கொடுத்தார்கள். அதே ஆண்டிலே திருமதி தம்பிராசா லீலாவதியவர்கள் ஆலயத்தின் மணிக்கோபுரத்தை அமைத்துக் கொடுத்துள்ளார்கள். அதன்பின்னர் தற்பொழுது 2015ம் ஆண்டில் இயங்கிய நிர்வாகசபையில் தலைவர் எஸ்.கே. சண்முகலிங்கம் செயலாளர் இ.குகநாதன். பொருளாளர் ந. கோணேஸ்வரன் பொதுப்பிரதிநிதி பொன் வைரமுத்து ஆகியோர் புலம்பெயர் மக்களுடன் இணைந்து புதிய இராஜகோபுரத் திருப்பணிகள் சபையினை உருவாக்கினார்கள். அதன் தலைவராக பொன். வைரமுத்து, செயலாளர் இ. தர்மராஜா. பொருளாளர் சோ. மணிவண்ணன் ஆகியோர் தெரிவாகினர். இவர்களுடைய ஆலோசனையின் போால வெளிநாடுகளில் நிதிசேகரிப்புக்குரிய பிரதிநிதிகளை உருவாக்கினர். சுவிற்சலாந்து நாட்டிலே தி.சிறிதரன். அ. நிமலன் அ. திகிலழகன். செ.ரூபகாந்தன். நா.ஜெயக்குமார். து. சுவேந்திரன் ப. இராஜகோபால், சுரேஸ் ஆனந்தி. சு. சந்திரன் ஆகியோர் இக்குழுவில் செயற்பட்டனர். கனடாவில் அ. பகிதரன் குழுவினர். பிரான்சில் பொ. செல்வராஜா. இ.பாலகிருஸ்னன். கி.விஜயதாசன் செ. கேதீஸ்வரன் ஆகியோரும். இலண்டன் மாநகரிலே இ.கோணேஸ்வரமூர்த்தி. ப. நடராசா. திரு அமரர் ச. சதிஸ்குமார்ஆகியயோர் இயங்கினார்கள். இந்த நாடுகளி லும் உள்ளூரிலும் வாழுகின்ற பெருமக்களுடைய நிதிசேகரிப்பினால் 35கோடி ரூபாய்கள் சேமிக்கப்பட்டு நவதளராஜகோபுரம் சிவபெரு மானுக்கும், பஞ்சதளராஜகோபுரம் ஸ்ரீபார்வதி அம்பாளுக்கும். அமைக்கப்படட்து. அத்துடன் பரிவாரமூர்த்திகளான விநாயகர், முருகன், கிருஸ்னர், ஐயனார், நவக்கிரகங்கள், சண்டேஸ்வரர், வைரவர் வீரபத்திரர் நடேசர், கொடிமரம், எழுந்தருளிஆலயம், வசந்தமண்டபம். யாகசாலை, ஆகியன கருங்கற்களால் கட்டப் பட்டுள்ளது. இவ்வாலயத்தின் சிற்பவேலைப் பணிகளை மிகச்சிறப் பாகவும் நேர்த்தியாகவும் ஸ்தாபித்து தந்த தலைமைச்சிற்பி திரு புருசோத்தமன் தஞ்சாவூர், அவர்களுக்கும் மற்றும் கஜன் யாழ்ப் பாணம், கார்த்திக் பண்டத்தரிப்பு, ஆகியோருக்கும் எம்பெருமான் திருவருள் நிறைந்திருக்க வேண்டுகின்றோம். ஆலயக்கட்டுமானப் பணிகளுக்குரிய தண்ணீர் வினியோகத்தை சிறப்பாக செய்து வந்த செ. ஜெகதீஸ்வரன் அவர்களுக்கு எம்பெருமானுடைய திருவருள் கிடைக்க வேண்டி அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுகளை யும் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது ஆலயத்தின் மரபுகளுக் கேற்ப சில மாற்றங்களைச் செய்யவேண்டி ஏற்பட்டது.ஆலயத்தின் கட்டுமானப்பணிகள் கருங்கல்லால் அமைக்கப்படவேண்டும் என்ற விதிகளுக்கமைவாக விநாயகப்பெருமானுக்கு கருங்கல்லால் கோயிலை எழுபபிய சோமாஸ்கந்தன் ஞானம்மா(கனடா) குடும்பத்தி னர் தீர்த்ததிருவிழாவின் உபயகாரராக இன்றும் இருந்துவரு கின்றார்கள். முருகப்பெருமானுக்குரிய ஆலயத்தை ந.குமாரசாமி (பிரான்ஸ்) அவர்களும், வைரவர் ஆலயத்தை சுப்பிரமணியம் வேலாயுதபிள்ளை(நோர்வே) அவர்களும். வீரபத்திரர்ஆலயத்தை நா.ஜெயக்குமார்குடும்பம் (பாபு சுவிஸ்) அவர்களாலும். பின்வீதியில் அமைந்திருக்கும் வைரவர் ஆலயத்தை புங்குடுதீவைச்சேர்ந்த கோபாலபிள்ளை புஸ்பராணி அவர்களாலும். நடேசர் ஆலயத்தை நவரத்தினம் சிவாநந்தன் குடும்ப்ம்(சுவிஸ்)அவர்களும். எழுத்தருளி ஆலயத்தை இலண்டன் வாழ் ஜீவா விஜயமாலாகுடும்பத்தினரும். நவக்கிரகஆலயத்தை இலண்டனைச் சேர்ந்த திருதிருமதி கந்தசாமி தர்மாம்பிகை குடும்பத்தினரும். எமது ஆலயத்திலுள்ள யாக சாலையை கனடாவில் வசித்துவரும் திருதிருமதி அ.பரமானத்தம் அவர்களும். ஐயனார் ஆலயத்தின் முன்பகுதியிலமைந்த கொட்ட கையை(கனடா) உதயாஸ் பல்பொருள் அங்காடி உரிமையாளரும். ஆலயதிருவருட்சக்தியை ஓங்கி ஒலிக்கும் மணிக்கோபுரத்தை வே.தம்பிராசா அவர்களின் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி லீலாவதி குடும்பத்தினராலும், நோர்வேயில் வசிக்கும் பிரணவரூபனும் அவருடைய சகோதரிகளுமாக இணைந்து ஒரு மணிக்கோபுரத்தையும் அமைத்தார்கள். அத்துடன் கொழும்பைச் சேர்ந்த த. பாரதிதாசன் அவர்களால் தந்தையார் தங்கேஸ்வரன் ஞாபகார்த்தமாக அம்பாளுக்குரிய மணிக்கோபுரத்தையும் அமைத் துக் கொடுத்துள்ளார்கள். அத்தோடு எமது ஆலயத்தின் முதலாம் திருவிழா உபயகாரராக விளங்கும் பொ. செல்வராஜா (பிரான்ஸ்) அவர்கள் கொடிமரத்திருப்பணியை அழகுற அமைத்துக்கொடுத் தார்கள். துரைராஜா இரவீந்திரன் நினைவாக சகோதரர் சுவேந்திரன்(சுவிஸ்)நந்தி.பலிபீடத் தளங்களை அமைத் துக் கொடுத்தார்கள். இவ்வாலயத்தின் சிவன் ராஜகோபுரக்கதவினை செல்லப்பா சோமசுந்தரம் நினைவாக சோ. மணிவண்ணன் சகோதரர்கள் அமைத்துக் கொடுத்தார்கள். நான்காவதாக நடைபெற வுள்ள எமது ஆலயத்தின் மகாகும்பாபிசேகத்திற்காக ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கு சால்வைகளை அன்பளிப்பு செய்யும் பொறுப்பினை(சுவிஸ்) பிரபாகரன் கிருஸ்ணபிள்ளை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

இவ்வாலயத்தின் உள்வீதியிலமைந்த கொட்டகை சீமந்துக் கொங்கிறீற்றால் போடப்படட்து. இவ்வாலயத்தின் நான்காவது மகா கும்பாபிசேகத்தை சிவஸ்ரீ ப.மு.பாலகுமாரகுருக்கள்(கிரியை கலா மணி நயினைக்குருமணி)தலைமையில் இன்று 12.07.2024ல் வெள்ளிக்கிழமை மிகச்சிறப்பாக நடைபெற எம்பெருமான் திருவருள் கூடியுள்ளது. இவ்விழாவினை சிறப்பிக்க உள்ளூரிலும் வெளிநாடு களிலிருந்தும் பெருந்திரளான அடியவர்கள் எல்லாம் வல்ல பாணாவிடைச்சிவனின் பாதங்கமலங்களை தரிசித்து திருவருள் பெறவுள்ளனர் என்பதை மகிழ்ச்சியோடு அறியத் தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். அத்துடன் 2026ம் ஆண் டிலே ஆலயத்தின் தேர்த்திருவிழா நாளன்று மேலும் இரண்டு தங் க ரதங்கள் ஓடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்ற மகிழிச்சியான தவலை பகிர்ந்துகொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இப்பெருவிழாவிற்கு வருகை தருகின்ற பக்தகோடிகளுக்கு அன்ன தானம் வழங்குவதை கனடாவைச் சேர்ந்த திரு. இராசையா பேரம்பலம் குடும்பத்தினர் பொறுப்பேற்றுள்ளனர்.கும்பாபிசேகத்தின் போது தொடர்ச்சியாக 48நாட்களும் நடைபெறும் மண்டலாபி சேகத்திற்கு வருகின்ற பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் பொறுப்பினை கனடாவைச் சேர்ந்த அமரர் சு. குமாரசாமி அவர் களுடைய பிள்ளைகள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.எமது பாணா விடைப் பெருமானுடைய ஆலயத்தில் அமைக்கப்பட்டிருக்கும் நாற்பது (40)கலசங்களையும் (101)நூற்றியொருகுடங்களையும் உபய மாக வழங்கியதோடு அணையாஜோதியாக பிரகாசிக்கும் அணையாவிளக்கினையும் ஸ்ரீபார்வதி அம்பாளுக்கு தாயகத் தைச் சேர்ந்த அமரர்களான திருதிருமதி செல்லத்துரை இலட்சுமி அவர்களுடைய ஞாபகார்த்தமாக அவருர்களுடைய பேரக் குழந்தை கள் உபயமாக வழங்கியுள்ளார்கள்.புங்குடுதீவு பழையதுறைப் பிரதானவீதியிலிருந்து 2கிலோமீற்றர் நீளமானவீதியை கனடா வைச்சர்ந்த திருவாளர் மயில்வாகனம் விக்கினேஸ்வரன் அவர்கள் தனது தாயராகிய மயில்வாகனம் கண்ணமா அவர்களுடைய ஞாபகார்த்தமாக சுமார் பத்துக்கோடிரூபாய்கள் மதிப்பிடத்தக்க பணியினை மேற்கொண்டு செய்துவருகின்றார்கள். பார்க்குமிட மெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூர ஆனந்தசிவத்தின் பேரருளையும் திருவருட்காடசிகளையும் கண்ணாரக் கண்டும் காதாறகேட்டும் வரலாற்றுத் தொன்மைமனையை அடையாளப்படுத்தி மகாதிருப்பணிகளை அருளுணர்வோடு செவ்வனே செய்வதற்கு அரும்பாடுழைத்த அத்தனை நல்லுள்ளங்களுக்கு எல்லாம் வல்ல பாணாவிடைச்சிவனாரின் திருவருள் நிறைந்து மங்களமாக அனைவரும் வாழ வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்.

தொடர்ச்சி மறுபக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புங்குடுதீவு வரலாற்றின் மீது ஒரு பார்வை

வரலாறு என்பது எல்லோருக்கும் அவசியமானது. ஒவ்வொரு இனமும் நமது வரலாறுகளைத் தெரிந்து கொள்ளாவிட்டால் அவர்கள் ஒரு இனத்தின் கூறாக இருக்கமுடியாது. நாம் வாழ்ந்த இடம், இனம், வாழ்க்கை, பின்புலம், சமயம், என்பவற்றை நாம் நன்றாகத் தெரிந்திருதத்ல் மிக மிக அவசியமானது. தன்னைப் பற்றி தெரியாதவர்களாக சமுதாயத்தில் நாம் இருப்பது நமது எதிர் காலத்திற்கு ஒரு மர்மமாகவே இருந்துவிடக்கூடாது. வரலாறு என்பது இன்றைய காலகட் டத்திற்கு அவசியமானது. தமிழ் இனத்தின் தோற்றத்தையும் வாழ்வியல் தடயங்களையும் இன்னமும் ஆராய்ந்து கொண்டிருக்கிறது உலகம். அதனால் ஒவ்வொருவரும் தாங்களுடைய வாழ்வியல் பின்புலங்களை, உங்கள் சுற்றாடலில் கிடைக்கின்ற அதிசமான தடயப்பொருட்களை, கல்வெட்டுகளை, ஏடுகளை, நூல்கள் ஆலய வரலாறுகள் கிராமியவாழ்க்கை முறைகளை மருத்துவக் குறிப்புகளை வெளிப்படுத்த வேண்டியது ஒவ்வொரு தமிழருடைய கடமையாக இருக்கவேண்டும். "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததுமிந்நாடே அவர் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததுமிந்நாடே" என்கிறார் மகாகவிபாரதியார். அதனால் எந்தையும் தாயுமாக வாழ்ந்திருந்த மண்ணிலே வரலாற்றுப் பாதைகளிலே அவற்றின் சுவடுகளில் படிந்திருந்த தூசிகளைத் தட்டிக் கொண்டு எமது மண்ணைப்பற்றிய தகவல்களடங்கிய எமது பார்வையை உங்களோடு பகிர்ந்துகொள்வதே எனது நோக்கமாக உள்ளது. "கல்தோன்றி மணதோன்றாக்காலத்தின் முன்பே முன் தோன்றி வாளொடு மூத்த தமிழ்" என்று படிக்கின்ற ஒவ்வொரு வரியிலும் தமிழர்களுடைய வரலாறு சொல்லப்படுகிறது. கற்காலம் தோன்றி அதன்பின் மண் மணல். இரும்பு,செம்பு, என்று இந்த உலகத்தின் வாழ்வியல் சுழற்சிகளோடு முதல் மாந்தனாகிய தமிழனும் இங்கே பின்னிப்பிணைந்திருக்கின்றான் என்பதிலே நமக்கெல்லாம் பெருமையாக இருக்கின்றது. அதனால் யாழ்பாணமாவட்டத்திலே ஆழமான கடலுக்கு மத்தியிலே அமைந்திருக்கும் மிக மிகசிறிய குட்டித்தரவுகளாக அமைந்திருக்கும் இந்தத்தீவுகளிலே புங்குடுதீவு எனும் ஒரு சிறு குட்டித்தீவினுடைய வரலாறு பற்றி குறிப்பிடுவதிலே பெருமகிழ்ச்சியடைகின்றேன். புங்குடுதீவு வரலாறு பற்றி பலர் எழுதிவைத்த பதிவுகளைத்தேடி அவற்றிலே இருந்தசிலவற்றை மீண்டும் வெளியுலகிற்கு வெளிப்படுத்த முனைகின்றேன். இதையும்விட மறைந்திருக்கும் பல விடயங்களைத் தெரிந்தவர்கள் இம்முயற்சியிலே ஈடுபடுதல் அவசியமானது என்பதையும் வலியுறுத்தி நிற்கின்றேன். புங்குடுதீவு மணல்ண நோக்கும் போது இது இலங்கையின் பிற இடங்களைப் போலவே நம்தீவகத்திலும் வரலாற்றுத் தெளிவினூடு நாம் பார்க்கின்றபோது பெருங்கற்பண்பாட்டுடன் தொடங்கிறது. பெருங்கற்பண்பாடு தீபகற்ப இந்தியாவில் கி.மு 1500முதல் கிபி 500வரை நிலவுகிறது. இப்பண்பாடு இலங்கையிலும் நிலவியிருக்கின்றது. 1910ம் ஆண்டு யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி போ. ரகுபதி. காரைநகரிலுள்ள களபூமியில் பெருங்கற்பண்பாட்டு சின்னாங்கள் சிலவற்றைக் கண்டுபிடித்தார்கள். இத்தகைய சின்னாங்கள் புங்குடுதீவின் வடபகுதியிலுள்ள ஊரைதீவிலும் காணப்படு கின்றன.தமிழர்கள் தங்களுடைய மரபுவழிவாழ்வியல் முறைகளிலே வட்டக்கற் களாலான கிணறுகளைப் பாவித்திருக்கிறார்கள் என்பது தொல்லியலாய்வாளர்களின் கூற்றாக இருந்து வருகின்றது. அவைபோலவே இப்பகுதியிலே வட்டக்கற்களாலான சிறு கிணறுகள் தென்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஊரைதீவிலுள்ள ஐயனார் ஆலயம் மிகப்பழமை வாய்ந்தது. காரைநகரில் அமைந்துள்ள களபூமியிலே காணப்படுவதுபோன்ற பெருங்கற்பண்பாட்டுச் சின்னாங் கள் புங்குடுதீவின் வடபகுதியில் அமைந்துள்ள ஊரைதீவிலும் காணப்படுகின்றன. ஊரைதீவிலுள்ள ஐயனார் ஆலயம் மிகப்பழமை வாய்ந்த வழிபாட்டு முறைகளுக் குடப்ட்ட இயற்கை வழிபாட்டுடன் கூடிய செய்கைமுறைகள் இங்கே காணப்படு கின்றன. தமிழர்களுடைய வழிபாடுகளிலே ஊரின் எல்லைப் பகுதிகளில் ஐயனார், வைரவர்,வீரபத்திரர், போன்ற காக்கும் தெய்வங்களைத் தமிழர்கள் வணங்கி வந்திருக்கின்றார்கள். அதுபோலவே நாம் குறிப்பிடப்படுகின்ற இவ்வாலயத்திலே ஐயனாரை மூலக்கடவுளாகக் கொண்டு வழி பாடுகளைச் செய்து வகின்றார்கள் என்பதை அறிய முடிகின்றது. ஆதிகாலச் சைவர்களுக்கு சிவனே முழுமுததற்கடவுள் என்பது சமயக் கோட்பாடாக இருந்தது.

இலங்கையிலே வருடத்திற்கு ஒருமுறை பெரிய பொங்கல் மடைபரவுதல் வேள்வி நடாத்தல் என்பன இப்போதும் பரவலாக நடைபெற்று வருவதால் தமிழ்நாட்டில் மட்டுமன்றி இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணாங்களில் கிராமங்களிலே இந்த வழிபாடுளை மக்கள் கையாண்டு வருவது இன்றும் வழக்கத்திலுள்ளது. ஆனால் ஐயனார் என்பது ஊர்மக்கள் தங்களுடைய எல்லைகளைக் காக்கும் சாமியாகவும் துன்பங்கள் துயரங்கள் அழிவுகள் எற்படும் போது ஐயனார் எல்லாவற்றையும் காப்பாற்றுவார் என்று அவரை மக்கள் சரணடைவது பலகாலமாக இருந்து வந்த முறையாகக் காணப்படுகிறது. மக்க ளுடைய வழிபாடுகளினால் இவ்வாலயம் பல நூறு ஆண்டு காலங்களுக்குப் பின்பு சிவாலயமாக மாற்றம் பெற்றுள்ளது. "ஏகன்,அநேகன்" என்ற கோட்பாட்டின் கீழ் அனேக வடிவங்களில் தெய்வங்கள் காட்சியளித்தாலும் அவை யாவுக்கும் மூலமாக இருப்பவர் சிவபெருமான் என்பதால் இவ்வாலயம் மக்களுடைய வழிபாட்டு மரபுகளுக்கேற்ப காலவோட்டத்திலே ஒரு சிவாலயமாக மாற்றம் பெற்றுள்ளது என்றே ஊகிக்க முடிகின்றது. இவ்வாலயதத்தின் கட்டடங்களின் அமைப்பு முறைகளிலே மிகப்பழமையான கற்றூண்கள் காணப்படுகின்றன. இக்கருங்கற் தூண்கள் மூலஇலிங்கம் என்பன இருந்ததைவிட வளர்ந்து வருவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.இச்சிவாலயத்திற்கு வடபால் அமைந்துள்ள கடற்கரைப் பக்கமாக வட்டக்கற்களினால் அமைந்துள்ள இரண்டு கிணறுகள் இருக்கின்றன. இவை சேர, சோழ, பாண்டிய, மண்டலங்களோடு ஈழமண்டலமும் ஒன்றாக விளங்கியதால் சேர, சோழ, பாண்டிய மண்டலங்களிலிருந்தும் சனங்கள் பெருவாரியாக வந்து ஈழமண்டலத்திலே குடியேறி வாழ்ந்தனர் என்பதை யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூலிலே ஆய்வாளர் திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார். ஈழமண்டலம் என்பது நமது இலங்கையைக்குறிக்கின்ற சொற்பிரயோகம் என்பதும் இங்கே தெளிவாக உள்ளது. எமது ஊருக்கு சிறு படகுகள் பாய்க்கப்பல்கள் வந்து செல்லக் கூடிய இடமாகப் புளியடித்துறை எனஅழைக்கப்படுகின்ற சிறிய துறைமுகம் காணப்படுகின்றது. புளியடித்துறைக்கு அருகாமையிலே மிகப்பெரிய பெருக்கு மரங்கள் காணப்பட்டன. இம்மரங்கள் அரேபியரால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. எனவே அரேபியர்கள் இத்தவீகளுக்கு வந்து வணிகத்திலே ஈடுபட்டார்கள் என்பதறக் இவை அடையாளமாகக் கொள்ளப்படுகின்றது. இத்தகைய மரங்கள் நெடுந்தீவு, மன்னார் போன்ற இடங்களிலே காணப்படுவதும் எல்லோரும் அறிந்ததே.இந்த வரலாற்றின்படிக்கு புங்குடுதீவிற்கு தென்இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு காணப்படுவதால் புங்குடுதீவிலே சோழகனோடை, சோழன்புலம், பல்லதீவு, என இன்னமும் அழைக்கப்படுகின்ற இடப்பெயர்கள் பாவனையில் உள்ளது. இது இங்கே வந்து போனவர்களால் சூட்டப்பட்டிருக்கலாம் எனக் கொள்வதற்கும் இடமுண்டு என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். தமிழகத்திலே கி.பி 9ம் நூற்றாண்டு தொடங்கி 12ம் நூற்றாண்டு வரைக்கும் மேலாதிக்கம் பெற்ற சோழ மன்னர்கள் சுமாராக ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இலங்கையின் பெரும் பகுதியை தங்களுடைய கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வந்திருக்கின்றார்கள் என்பதையும் இவ்வரலாறுகள் பதிவு செய் கின்றன. இக்கால கட்டத்தில் இந்துசமயம் இங்கு மேலோங்கி இருந்தது எனலாம். தமிழ் நாட்டிலே ஆதிக்கம் பெற்ற இரண்டாவது பாண்டியப் பேரரசு காலத்திலே அவர்களுடைய ஆதரவுடன் அவர்களுடைய தளபதி ஒருவன் ஆரியச் சக்கரவர்த்தி என்பவனுடைய தலைமையில் யாழ்ப்பாணததில் தமிழரசு ஒன்றை உருவாக்கி கி.பி 1250முதல் பல ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான் என்கிறது வரலாறு. இந்தக் காலத்திலே இந்து சமயச்செல்வாக்கு தீவகத்தில் மேலோங்கி நின்றது எனலாம். இதன் பின்புஐரோப்பிய படையெடுப்புகள் முன்னேற்றம் கண்டுள்ளன.

இவர்கள் வியாபாரநோக்கிலே இலங்கைக்குள் புகுந்து எமது மக்களையும் நாட்டையும் ஆக்கிரமிப்பில் இருந்தார்கள் ன்பதை வரலாறுகள் பதிவுசெய்கின்றன. அதனால் போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், ஆட்சி இலங்கையிலே பலகாலங் கள் நீடித்தது.இவர்களுடைய வருகைக்குப்பின்னால் முன்னைய அரசர்களின் ஆட்சிக் காலங்களிலே இவர்களுடைய தலையீடுகளினால் இந்துசமயம் நலிவுற்றுப் போயிருந்தது. ஆனால் பிரித்தானியர் காலத்திலே பொதுவாக சமயங்களுக்கு சுதந்திரம் சரிசமமாக நிலவியது எனலாம். ஆதிகாலம் தொடக்கம் கிரேக்க, உரோம, அராபிய, சீனத்தொடர்புகள் இலங்கையுடன் ஏற்பட்டது.

இந்தியாவின் தமிழகம், கேரளம், ஆந்திரம், கன்னடம், கலிங்கம், மற்றும் வடஇந்தியத் தொடர்புகளும் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான தொடர்புகள் காரணமாகவே தீவகத்திலும் ஓரளவாவது நிலவி வந்தமைக்கு சில இடப்பெயர்கள் சான்று பகர்கின்றன. பல்லதீவு, பல்லவன்புலம், போன்ற இடதொடர்புகள் பல்லவத் தொடர்பையும் சோழன் புலம், சோழகனோடை போன்றவை சோழர்களுடைய தொடர்புகளையும், மாறன் புலவு, பாண்டியன்வளவு, போன்றவை பாண்டியர்களுடைய தொடர்பையும் கலிங்கன் புலம், கலிங்கராயன்வளவு, போன்றவை கலிங்கத் தொடர்பையும், செட்டிவளவு செட்டியர் தோட்டம் என்பன செட்டியர்களுடைய தொடர்பினையும் பணிக்கன் புலம் போன்றவை கேரளத் தொடர்பையும் சீனன்புலம், சாவகன்வளவு, போன்றவை முறையே சீனத்தொடர்பையும் சாவகத் தொடர்புகளையும் காட்டுகின்றன என்பதை நாம் வரலாறுகளைப்படிக்குநதோறும் உணரமுடிகின்றது. இலங்கையின் பாரம்பரியத்திலே தமிழும் சைவமும் நமது வாழ்வியல் அடையாளங்களைக் கொண்டிருந்தன என்பதற்குப் பல ஆயைங்களின் வரலாறுகள் டுத்துக்கூறுகின்றன. ஆனால் புங்குடுதீவு 90சதவீதம் இந்துக்களே வாழுகின்றனர். தீவின் எநடுப்பகுதியிலே குறிப்பட்டளவு கிறிஸ்த்தவர்களும் வாழுகின்றனர். பண்டைக் காலந்தொட்டு இந்தியாவின் தென்கோடியில் நெய்தல் நிலத்தில் வாழ்ந்துவந்த பரதவர்கள் 1534ம் ஆண்டு ஆட்சியிலிருந்த போர்த்துக்கல் அரசனால் மதம் மாற்றப்பட்டு கிறிஸ்த்தவர்கள் ஆக்கபட்டிருக்கின்றார்கள். எனினும் கிறிஸ்த்தவ அறிவைப் போதியளவு கொண்டிராத நிலையிலே ஏனோ தானோ என்று பலர் வாழ்ந்து வந்தனர். இக்கால கட்டத்தில் புனித பிரான்சிஸ் சவேரியாரின் வருகையானது மிகப்பெரிய மாறுதல்களைப் பரதவர்கள் மத்தியிலே எற்படுதத்தியுள்ளது. ஊக்கத்தையும் உழைப்பையும் மையமாகக் கொண்டு செயலாற்றிவந்தவர்களால் ஏற்பட்ட சில அழுத்தங்களால் வெளியேறிய இச்சமூகத்தினர் இலங்கையின் வடபாலுள்ள பலதீவுகளில் குடியேறினர். இவர்களில் ஒருபகுதியினர் புங்குடுதீவின் தென்கழீ முனையிலும் இறங்கிக் குடியேறினர். சிலகாலம் செல்ல தீவின் மத்திய பகுதியிலே ஆலமரங்களும் பற்றைகள் புதர்கள் நிறைந்த இடததில் புனித சவேரியாரின் ஆலயத்தை அமைத்தனர். பின்பு அதன் சூழலிலே வாழத்தொடங் கினார்கள். இவ்வாறே புங்குடுதீவின் வேறு பல பகுதிகளிலும் கிறிஸ்த்தவர்கள் வாழத்தொடங் கினார்கள். அதனை புங்கு உடுத்தீவு எனப்பிரித்தும், புங்கமரம் நிறைந்ததீவு என்பதால் புங்குடுதீவு எனக் கூறலாம்.சங்க இலக்கியங்களிலே கூறப்படுகின்ற நிலத்திணை களிலே ஒவ்வொரு திணைகளிலும் இருந்த இடங்கள் நில அமைப்புகள் நீரோடைகள் மலைகள், குளங்கள், ஆறுகள் மக்கள், விலங்குகள், பறவைகள் மரங்கள் செடிகொடிகள் பூகக்ள் போன்ற சூழல்களைப்பற்றி மிகத்தெளிவாக கூறியிருக் கின்றார்கள். அந்த வகையிலே புங்குடுதீவின் நிலப்பகுதி களிலே அதிகமாக புங்கமரம் நிறைந்து காணப்பட்தால் இந்த இடந்தைப் புங்குடுதீவு என அழைத்திருக்கலாம் என்பதை உணரமுடிகின்றது. புங்கமரம் நெய்தல் நிலத்துக்கருப் பொருள்களில் ஒன்று எனப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை கூறியிருக் கின்றார்கள். அதனால் மேலே குறிப்பிட்ட வரலாற்று ஆய்வுகளின்படிக்கு மிகமிக முக்கியமான ஒரு இடதந்த நாம் அவதானிக்க முடிகின்றது. இந்த புங்குடுதீவிலே அன்று சிறுதெய்வமாக வழி பாடியற்றப்பட்டு வந்த ஐயனார் ஆலயம் இன்று பாணாவிடைச்சிவன் என்ற வரலாற்றுப்பெருமையின் பொக்கிசமாக விளங்குகின்றது என்பதை நாம் தீர்மானிக்க முடிகின்றது. அதனால் அத்தனை வரலாற்றுப் பெருமை மிக்க இவ்வாலயத்தினூடாக இன்றைய தலைமுறையினருக்கு நாம் எடுத்துரைக்கக் கூடிய செய்தி யாதெனில் நாம்வாழுகின்ற ஒவ்வொரு சூழலிலும் அமைந்திருக்கும் ஒவ்வொரு தடயங்களும் தமிழர்களுடைய வரலாறுகளை சுட்டிக்காட்டுகின்ற வரலாற்றுப்பின்னணிக்கு மகுடமாக அமைகின்றது ன்பதை நாம் அனைவரும் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுகொள்கின்றோம்.

**ஆக்கம்.பொன் வைரமுத்து** (SLAS)
இளைப்பாறிய காணி அலுவலகப் பணிப்பாளர் கிளிநொச்சி.
திருப்பணிச்சபைத் தலைவர்.

## மூலப்பொருளை முழுதாய் உணரும் குடமுழுக்கு விழாவும் மகாகும்பாபிசேகமும்

கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்பது ஆன்றோர்வாக்கு. அதனால் நாம் வாழுகின்ற சுற்றாடலிலே கோயில் எவ்வளவு அவசியமானது என்பதை நாம் உணர்ந்து கொண்டுள்ளோம். திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணை என்பார்கள். அறிந்தும் அறியாமலும் கண்டும் காணாமலும் நமக்கு ஒரு சக்தி நம்முடைய வேண்டுதலுக்கு வழிசமைத்துத் தருகின்றது என்றால் அதன் கருத்தை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். நமது தாயகமண்ணிலே வாழ் கின்ற ஒவ்வொரு வருடைய நம்பிக்கையை அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையில் இருந்து நாம் கண்டுகொள்ள முடியும்.

பலவிதமான ஆபத்துகளில் துடிப்பவர்களை, நம்மையும் நம் குழந்தைகளையும் ஆபத்துகளிலிருந்து காப்பாற்று கின்ற மாபெரும்சக்தி எது? எமது உள்ளங்களையும் உணர்வுகளைக் கடந்து எங்கேயோ நிறைந்திருக் கின்ற இறையருளானது நாம் அனாதரவாகத் தவிக் கின்ற போது நமக்குள் அகமும் புறமுமாய் வந்து ஆட்கொண்டருளுவது எது.?

ஏதோ ஒன்று ஒரு புள்ளியில் எம்மைத் தாங்கிக் கொள்கிறது என்றால் அதைத்தான் கடவுளின் திருவருள் என்று கையெடுதத்க் கும்பிடுகின்றோம். கண்ணால் பார்க்காவிட்டாலும் மற்றவர்கள் கண்ணீர்வடித்து அவன் கால டியைத் தொழுது அருளோசை எழுப்பி எம்மையும் அந்த அருட்சக்திக்குள்ளே இழுத்துக்கொண்டு போகின்றார்களே அது எப்படி.?

ஆயிரம் பல்லாயிரம் அடியவர்களுக்கு மத்தியிலே யாரோ ஒருவர் ஆட்கொள்ளப் பட்டு எல்லோரையும் எட்டிப்பார்க்கச் செய்கின்ற அந்த அற்புதம் எங்கிருந்து வருகிறது.

இதைத்தான் அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதை நமக்கு முன்னாலே அறிந்து சொன்னவர்களின் அடிச்சுவடுகளை நோக்கி நாமும் கைகளைக் கூப்பிக்கொண்டு வலம்வருகின்றோம் என்றால் அது எப்படி நடக்கின்றது.

எல்லாம் வல்ல ஈசனின் இறைநிலையை, அருட் பிவாகத்தை நம்மால் அறியமுடியாத இந்தப் பிரபஞ்சத்தை ஆண்டு கொண்டி ருக்கும் அந்த அற்புதத்தை நாம் வணங்கவேண்டும் என்பதற்காகத்தான் ஆலயங்களை அமைக்கின்றோம்.

அதனால்தான் தேவார திருப்பதிகங்களை பாடிய நால்வருடைய வரலாற்றிலும் நிறைந்து நின்ற அந்தப்பேரருள் நாமும் பதிகங்களைப் பணிவோடு பாடுகின்ற போது எங்களுடைய எண்ணங்களிலும் நிறைந்து நிற்கின்றது.

அங்கிங் கெனாதபடி எங்கும்பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி நின்று அனைத்தையும் காத்தும்படைத்தும் கரந்தும் விளையாடும் எம்பெருமானின் திருவருட்சக்தியை நாம் பெறவேண்டு மாயின் அது ஆலய வழிபாட்டின் வழியில் மட்டுமே பெற்றுக்கொள்ள முடிகிறது.

சமயவரலாறு களிலே நாம் காணுகின்ற அடியவர்களின் இன்னல்களிலிருந்து தாங்களைக் காப்பாற்றிய இறைவனை அவர்கள் புகழ்ந்து பாடியதை நாம் கேட்கின்றபோது நமக்குள்ளேயும் ஏதோ ஒரு பேரருள் புகுந்துகொண்டு நம்மையும் வழிநடத்திச் செல்கின்றதை நாம் உணருகின்றோம்.

அப்படியான எண்ணங்களை நாமும் நமக்குள் வருவித்துக்கொள்ள நம்மைப் புனிதப்படுத்திக் கொள்கின்றோம். தேவார பராயணங்கள் வெறுமனே ஒரு காலத்திற் காகப் பாடிவைத்த வெறும் பாடல் களல்ல. அவற்றிலே சக்தியிருக் கின்றது. ஆன்பலம் இருக்கிறது இசை இருக்கிறது உயிர் இருக்கிறது இறை இருக்கிறது என்பதை நமது தலை முறையினர் நம்பவேண்டும்.

அவர்களும் மனதார நினைந்து வழிபாடுகளைப் பின்பற்றுகின்ற வழக் கங்களை உருவாக்க வேண்டும். இறை உணர்வும் இன்பமயமான வாழ்வும் அடுத்தவர்களுக்கு உதவுகின்ற பண்பையும் ஆலய வழிபாடுகளினூடாக பயிற்றுவிக்க வேண்டும்.

இந்தவிசித்திரமான உலகத்திலே எமது புதிய சமுதாயம் புதிய வழிகளை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றது. காலத்திற்கேற்ற மாற்றங்களால் வேற்று மதங்களிலே தங்களை இணைத்துக் கொள்கின்றனர். இவர்களுக்கு எமது சமய வாழ்வியலில் சொல்லப் படுகின்ற அன்பே சிவம் என்ற உண்மைகளை உணர்த்த நாம் ஒன்றுபடவேண்டும். அப்பொழுதுதான் நீயும் ஒரு சைவமரபின் அடையாளமாக இருக்கமுடியும் என்பதை உணர்த்த வேண்டும்.

நாம் அவர்களோடு பேசவேண்டும். பண்பாடுகலாசாரம் சைவஉணவு முறைகள் என்பவற்றின் நல்வழிகளை உணர்த்தவேண்டும். உணவே மருந்து என்ற உண்மையைப் புலப்படுத்தவேண்டும். மற்றவர்களுடைய வழிகாட்டுதல் உனக்குப் பாதைதனைக் காட்டுமென்றால், உன்னுடைய கல்வி உனக்குள் ஒரு பெருமையை உருவாக்குமென்றால் உன்னுடைய விடாமுயற்சி உன்னை முன்னேற்றும்மென்றால் எங்கும் பிரகாசமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும் இறை வனுடைய திருவருள் உன்னை ஏன் காப்பாற்றாது. உன்னுடைய நம்பிக்கை உன்னை முன்னேற்றுமென்றால் இறைநம்பிக்கை எல்லோரையும் காப்பாற் றும் என்பதை உணர்த்தவேண்டும். இந்த இயற்கையை உனக்காகப்படைத்த பிரமம் நம் எல்லோரையும் காப்பாற்றும் என்ற வாழ்வியலை ஆலயவழி பாடுகளின்மூலமாக உணர்த்த வேண்டும். புறச்சூழல் உனக்குக் கைகொடுக்கு மென்றால் உன்உயிரை இயக்குகின்ற அந்த தெய்வீகத்தால் உன்னை ஏன் காப்பாற்றமுடியாது. இந்தப் பிரபஞ்சமெல்லாம் ஒளிர்ந்து கொண்டிருக்கும் இயற்கையின் இயக்கத்தை அளந்து அசைவிப்பதும் அவனுடைய திருவிளை யாடல் என்பதை நீ எப்போது உணருகின்றாயோ அப்போதுதான் உனக்குள் இருக்கும் இறையின் இன்னருளை நீயும் அறியமுடியும். நம்பிக்கையோடு இறைவனை நோக்கி நூறு அடிவைத்தால் அவன் ஓரடி உன்னை நோக்கிவருவான் என்ற அன்பின் வலிமையை ஆலயவழிபாடுகளே உணர்த்தி நிற்கின்றன.

இந்த ஆலயங்கள் வெறுமனே கட்டப்படுகின்ற கட்டிடங்கள் அல்ல. இது ஒரு மானுடத்தின் பிறவிப்பெரும்பயனை உணர்த்துவிக்கும் வழி. நமது கண்களுக் குச் சுயாதீனமான ஒளிஇல்லை. இந்தகண்களால் வேற்று ஒளியைக் கொண்டுதான் வேறுபொருளை நம்மால் காணமுடிகின்றது. இருளடைந்து போய் கிடக்கின்ற இந்த உடலுக்குள்ளே ஆணவம் கன்மம் மாயை என்ற மலங்கள் சுழன்று கொண்டிருக்கின்ற போது உனக்குள் திருவருளாகிய ஒளி உட்புகமுடியாது. அதனால் உனக்குள் எப்போது ஒளி என்ற திருவருள் படிப்படியாக சுடரத் தொடங்குகின்றதோ அப்பொழுதுதான் உன்னால் உன்னை உணர்ந்து கொள்ள முடியும். அதனால் இறைவனைக் காணுகின்ற சக்தி எம் உடலுக்குள் இருந்தாலும் நமக்குள் இருக்கின்ற ஆணவமும் அழுக்குகளும் திருவருளாகிய ஒளியை உள்ளே போகவிடுவதில்லை. அதனால் நாம் அனைவருக்குள்ளும் அந்த ஒளியை பிரகாசிக்கச் செய்யவேண்டும் என்ப தற்காகவேதான் ஆலயங்களை அமைத்து பூசைகள் புனருஸ்தானங்களைச் செய்து உடலுகக்ள் வரமுடியாத அமைதியையும் திருவருளையும் வருவித்துக் கொள்வதற்காக ஆலயங்களுக்குச் செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம். அந்த ஆலயவழிபாட்டினால் நம் மனதிலே உள்ள ஆசை கோபம் களவு வஞ்சனை சூது வாது அகங்காரம் ஆணவம் போன்ற இருள்தன்மைகள் படிப்படியாக நீங்கிப்போகும். நாம் இந்த அறியாமையிலிருந்து தெளிவு பெறுவதற்காகவே தான் நாம் ஆலயத்திற்குச் செல்கின்றோம். அதனால்தான் மாபெரும் கோபுரங்களை அமைத்து ஆலயங்களை உருவாக்கி எங்கிருந்து பார்த்தாலும் இறைவனுடைய சன்னதியின் கோபுரமும் திருவருளும் நமக்குள் நிறையவேண்டும் என்பதற்காகவே பெரிய வீடுகளை இறைவனுக்கும் சிறியவீடுகளை நமக்காக்வும் அமைந்துக் கொண்டார்கள் நம் முன்னோர்கள்.

அதனால் தான் காலையும் மாலையும் கடவுளை வணங்கு
ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்கிறார்கள்.

நமது உடலாலும் உள்ளத்தாலும் நிறைக்கபபட்டிருக்கும் கெட்ட எண்ணங் களும் அழுக்குகளும் எம்மில் இருந்து அகல வேண்டும் என்பதற்காகவே தான் இந்தப் புனிதமான இடங்களுக்குச் சென்று எமக்குள்ளேயும் இறைவனுடைய திருவருளை நிறைத்துக் கொண்டிருக்கின்றோம். ஒரு கரிப்பிடித்த பாத்திரத்தை மினுக்குவதற்காக பல இரசாயனத் திரவங் களைக் கொண்டு மினுக்க பல முயற்சிகளை எடுக்கின்றோம். அதுபோலதான் எமது உடலிலும் உள்ளத்திலும் இருக்கும் கரியினை நீகக்வதற்காத்தான் பஞ்சாட்சர மந்திரங்களையும் தேவாரதிருவாசக திருப்புகழையும் பாடிப்பாடி நமது உடலை மினுக்க முடியும் என்பதை எவன் உணர்கின்றானோ அவனால் மட்டுமே இறைவனுடைய திருவருளைப் பெறமுடியும். ஆலயத்திற்காக நாம் அமைக்கின்ற கருங் கற்றூண்கள் கடடிடங்கள், விக்கிரகங்கள்,சிலைகள் அலங்காரத்தேர் வாகனங்கள் எல்லாமே எமது மனஇருளை அகற்றி ஒளியைநிரப்பி அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதை உணர்த்துவதற்காகவே காட்சியளிக்கின்றன.

ஆன்மீக பலத்தைக்கொண்டு அறியாமையை நீககி அறிவே இறைவன் என்ற உன்னத நிலையை உணர்த்தவே ஆலயவழி பாடுகள் அவசியமாகின்றன. அந்த ஆலயங்களை ஏன் எதற்காக எப்படி அமைக்கின்றோம் என்பதை நாம் சரியாக உணரும் போதுதான் ஆலய வழிபாடுகளின் அவசியத்தை நம்மால் உணர முடியும். திருக்குடமுழுக்கு கும்பாபிசேகத்தை நாம் ஏன் செய்யவேண்டும் என்பதை எப்போதாவது சிந்தித்திருக்கின்றோமா.? 12வருடங் களுக்கு ஒருமுறை கும்பாபிசேகம் எதற்காகச் செய்யப்படுகின்றது என்று ஆராயுமபோது ஒரு ஆலயத்தின் நிர்மாணத்தின் அருட்சக்தி நிறைந்திருக்கும் காலம் பன்னிரண்டு வருடங்கள் என்கிறார்கள் பெரியவர்கள். குருபகவானை வியாழன்(வியாழகுரு)என்று கூறுவர்கள். இந்த வியாழபகவான் ஒரு ராசியிலே ஒருவருடம் சஞ்சாரம் செய்கிறார் குருபகவான் ஒரு ராசியைக் கடந்து மற்ற இராசிக்குச்செல்ல ஒரு வருடம் எடுக்கிறது. இவ்வாறு பன்னிரண்டு ராசிகளை கடந்து மீண்டும் முதலாவது இடத்திற்கு வரும்போது 12ஆண்டுகள் முடிந்து விடுகின்றது. இந்தப்பன்னிரண்டு ஆண்டு காலச்சுழற்சியிலே வியாழ பகவானின் ஆதிக்கமும் அருட்சக்தியும் குறையும்போது அவ்வாலயத்தின் விக்கிரகங்களிலே ஆவாகனம் செய்யப்பட்டிருந்த தெய்வீகசக்தி படிப்படியாக குறைந்துபோவதாக நூல்கள் கூறுகின்றன. அதனால் தான் 12வருடங் களுக்குப் பின்பு மீண்டும் அவ்வாலயத்திலே இறைவனுடைய முழுச்சக்தியை நிரப்பிக்கொள்ள கும்பாபிசேகம் செய்யப்படுகின்றது. நமது வாழ்க்கையிலும் வியாழன் மாற்றம் பலவித நன்மைகளை அல்லது தீமைகளைச் செய்கின்றது என்பதை அறியவே ஜோதிடம் பார்த்துக்கொள்கின்றோம்.அதுவும் வியாழனா கிய குருநிலையை வைத்தே கணிக்கப்படுகின்றது.

பலகாலங்களாக வழிபாடுகள், பூஜைகள், இல்லாத ஆலயங்களை, அல்லது புதிதாகக கட்டப்பட்ட ஆலயங்களிலே, அல்லது 12வருடங்களுக்குப் பின்னால் ஒரு ஆலயத்திலே நாம் கும்பாபிசேகம் செய்து புதுப்பிக்கின்ற போது இறையருள் சக்தி அவ்வாலயங்களிலே நிறைந்து விளங்கும் என்று வேதவிற்பன்னர்கள் கூறுகின்றார்கள். கும்பாபிசேக நாட்களிலே ஆலயத்தைப் புனரமைத்து கருவறை, மூலஸ்தானம் பரிவாரமூர்த்திகள் கோபுரங்கள் மண்டபங்கள் என்பவற்றை அழகுபடுத்தி புனிதகங்கையில் இருந்து கும்பங்களிலே நீர் நிறைத்து அகண்ட பிரமமாக விளங்கும் இறைவனுடைய திருவருட்சக்தியை ஆலயத்திலே குவியச்செய்வது பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரண ஆனந்தசிவத்தை அண்டவெளியிலிருந்து இறக்கி ஒரு ஆலயத்தினுள்ளே அருடபிரகாசத்தை நிறைக்கச்செய்கின்ற கிரியையாகவும் கூறப்படுகின்றது. கும்பத்திலே இறக்கி அக்கினியாகத்திலே அருட்பெருஞ் சோதியை ஆவாகனம் செய்து மந்திர உச்சாடனங்களால் உயிர்ப்பித்து புனிதமான கும்பம், கலசங்களுக்கும் மூலவருக்கும் இணைப்பை ஏற்படுத்தி இறைசக்தியை மூலஸ்தானலிங்கத்திலே நிறைத்து புனித கும்பங்களால் சிவலிங்கத்தையும் கோபுரக்கலசங்களையும் திருமுழுக்காட்டி இறைசக்தியை நிறைத்துக் கொள்ளச் செய்வதே கும்பாபிசேக குடமுழுக்கு என்று கூறுகின்றோம். மேலும் சக்திவாய்ந்த மந்திரங்களால் யாகங்கள் செய்யப்பட்ட புனித தீர்த்தங்களால் இவற்றின் மேலும் கோபுரங்கள் மீதும் அபிசேகம் செய்யும்போது விக்கிரகங்கள் தெய்வ சக்தியைப் பெற்றுக் கொள்கின்றன. ஆலயங்களிலே பிரதிஸ்டை செய்யப்பட்ட விக்கிரகங்களுக்கு இறைசக்தியை நிறைப்பதே கும்பாபிசேகத்தின் முக்கிய நோக்கமாகின்றது. கும்பாபிசேகத்தின் பின்புதான் ஆலயம் வழிபாட்டிற்குரிய இடமாக முழுமைபெறுகின்றது.

ஒரு மண்டலம்" எனக்கருதப்படுகின்ற 48நாள் மண்டலபூசைகளிலே நடாத்தப்படுகின்ற யாக வேள்விகளால் தேவாரபராய ணங்களால் வேத மந்திர உச்சாடனங்களால் இறைசக்தியை பெருகச்செய்து அவ்வாலயத்தைப் புனிதப்படுத்து வார்கள். இந்தக்காலத்தில் மனம், வாக்கு, காயம், சித்தம், புத்தி என்பவற்றைத் தூய்மையாக்கி சிவபராயணங்களை ஓதிக்கொண்டு பிரதிஸ்டை செய்யவிருக் கின்ற விக்கிரகங்களுக்கு எண்ணெய்சாத்தி எண்ணெய்க்காப்பு என்பவற்றை செய்து மக்கள் வழிபாடுசெய்து தம்பிறவிப் பயனின் பெரும்பயனை அடைகின்ற நாளாகவும் அமைகின்றது. ஒவ்வொரு நாளும் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடியற்ற முடியாத அடியவர்கள் கும்பாபிசேகத் திருவிழாவைக் கண்ணாரக் கண்டாலே பன்னிரண்டு ஆண்டுகளுக்குரிய பலனை அனுபவிக்கமுடியும் என்று வேதசாஸ்த்திரங்கள் கூறுகின்றன. அதனால் மகாகும்பாபிசேகத்தைப் பார்த்து வழிபாடுசெய்யும் அன்பர்களுக்கு நோய்பிணிகள் நீங்கி சகலசௌபாக்கியங் களையும் பெறுவார்கள் என்பது ஐதீகமாகும்.

இவ்வாறு பல பொருட்செலவிலே கும்பாபிசேகங்களைச் செய்தாலும் அதை விடப் பலமடங்கு பொன் பொருள் வளங்கள் நிறைந்து சகலசௌபாக் கியங்களும் நிறைந்த விளங்கும் என்பதும் ஐதீகம். அதனால் நமது தாயகத்திலே எழுந்தருளி ஈழத்துஇராமேஸ்வரமாக அமைந்த பதியிலே திருப்பாகமமைந்த பார்பதியம்பாளாக வும் பாணவிடைப் பெருமானகவும் காட்சியளிக்கும் கண்கொள்ளாக்காடசியைக் கண்டு பக்தகோடிகள் அனை வரும் விரும்பிய வாழ்வையும் அட்டமாசித்திகளையும் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழவேண்டும் என்று பிரார்த்தித்து வணங்கிநிற்கின்றோம்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**இளைபாறிய அதிபர் எஸ். கே. சண்முகலிங்கம்** J.P
தலைவர் ஆலயபரிபாலன தர்மகர்தா சபை

தொடர்ச்சி மறுபக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அள்ள அள்ளக் குறையாத அப்பர் சோறு

திருமூலர் ஈழுத்தை சிவபூமி என்பார். ஈழத்து இராமேஸ்வரம் என அழைக்கப்படும் பாணா விடை சிவன் ஆலயம் சுயம்பு இலிங்கமாக வடபால் இலங்கையில் அமைந்துள்ளது. இதனைப் பாணாவிடைப் பதினவும் அழைப்பர். இங்கு எழுந்தருளியிருக்கும் தான்தோன்றி இலிங்கத்தை பர்வதவர்த்தனி சமேத இராமலிங்கேஸ்வரர் என மக்கள் அன்புடன் பூசிப்பர். இச்சுயம்பு இலிங்கமானது அநாதியானது தன் மேனியின் மீது பிறந்த எழுத்துக்களைக் கொண்டது. நிலமட்டத் திலிருந்து மூன்றரை அடி வரையிலான வளர்ந்து கொண்டிருக்கும் சிறப்புடைய கருங்கல் இலிங்கமாகும். இது மாவிலங்கை இன மரத்தைச் சேர்ந்த புராதன தல விருட்சத்தின் கீழ் பகுதி மூன்று வேர்களாக கால் விட்டபடி நிலமட்டத்தின் கீழ் சென்று கொண்டிருக்கிறது. அருவுருவ வடிவான இலிங்க வடிவானது இற்றைக்கு 6000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இராவணேஸ்வரன் காலத்திலிருந்தே இலங்கையில் இருந்து உள்ளது. இவ்வாலயம் எழுந்தருளியிருக்கும் பாணாவிடை எனும் இடப்பெயர் பதி பற்றி சங்க இலக்கிய நூலான பத்துப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இதன் அயலில் வெட்சிப்புட்டி கரம்தாலி (இரவு வேவு பார்த்த குற்றத்திற்காக தன் கையையே வெட்டிய பாண்டிய மன்னனுக்கு தன் தாலியைப் பரிசாகக் கொடுத்த பெண் வாழ்ந்த இடம்) களதீவு (பாண்டிய மன்னர்கள் போர்க்களம் நடத்திய இடம்) என்ற வரிகளை சங்க இலக்கிய நூலில் காண முடிவதனால் இது ஒரு புராதன ஆலயமாகும். இவ்வாலயம் பண்டு தொட்டே மக்களின் அங்கத்துறு நோய்கள் அகற்றும் சிறப்பு மிக்க ஆலயமாக 1950வரை இருந்து ள்ளது. 1912ம் ஆண்டில் இருந்து திருவீழி மிழலையில் அப்பர் அடிகளும் ஆளுடைப் பிள்ளையும் பஞ்சத்தால் வாடிய மக்களுக்கு அன்னதானமும் தாக சாந்தியும் அளிக்கும் மையமாக மாறியது. இன்றைய விழாக் கூட அத்தர்மப் பணியின் நூற்றாண்டு நிறைவு நிகழ்வாகும்.

1940க்கு முன்பு இலங்கையானது அரிசியினை பிற நாடுகளிலிருந்து பெறவில்லை. இதனால் நிலச்சுவாந்தர்களும் பணக்காரர்களும் வாரத்தில் ஏழு நாட்கள் சோறு சாப்பிட்டனர். ஏழை மக்கள் தம் உடல் உழைப்பின் மூலம் கிடைக்கும் தானியத்தைக் கொண்டு வாரத்தில் ஓரிரு நாட்கள் அரிசிச் சோற்றினையும் மற்றைய நாட்களில் உப உணவுப் பொருட்களையும் பாவித்து வந்த காலம் அது. இறைவன் திருவுளம் 1909ம் ஆண்டில் 20வயதைத் தாண்டி இல்லற வாழ்வில் தலை வாயிலில் தனது ,சகோதரியின் வீட்டில் தங்கியிருந்த மாணிக்கம் அவர்கள எம்பெருமான் பெயர்சொல்லி அழைத்து பிராமண வடிவில் தரிசனம் கொடுத்து தன்னை ஆதரிக்கும் படி கேட்டுச் சென்றார். இந்திய இராமேஸ்வரத்தில் தலைமறைவாய் இருந்த சவாமிகளுக்கு நான் சுயம்பு இலிங்கமாக இந்த இடத்தில் இருக்கின்றேன் என்னை நீ அங்கு சென்று வழிபடலாம் என ஆணை கிடைத்தது. இதன்பிரகாரம் சிவக்கன்று மருதப்பு சுவாமி அவர்கள் அவ்வூர் மக்களை நேரில் சந்தித்து ஆலய வளர்ச்சி பற்றிச்சிந்தித்தார்கள். அப்பூதியடிகளின் அடியாராகவும் தர்ம சிந்தனை உள்ள மனிதராகவும் விளங்கிய பல பெரியாரின் உதவியுடன் திருநாவுக்கரசர் குரு பூசையையும் சரீரத் தொண்டின் மூலம் இறைவனை அடையும் மார்க்கத்தையும் சுவாமியிடம் கூறினார்கள். சுவாமி அவர்கள் திருநாவுக்கர சரின் ஆன்மா சிவத்துடன் கலந்த திதியான சித்திரைச் சதயத்தன்று பொது மக்கள் உதவியுடனும், பெரியார்களின் உதவியுடனும் திருநாவுக்கரசர் குருபூசையை ஆரம்பித்தார். மாணிக்கம் அவர்கள் தண்ணீர் தட்டுப்பாடு நிறைந்த கிராமத்தில் விழாவில் கலந்து கொள்ளும் அடியார்களுக்கு திருநாவுக்கரசர் பெயரால் தண்ணீர்ப் பந்தல் அமைத்து பல சுவைநீர்களை தானமாக வழங்கினார். இறைவனது திருவருள் மிகசொற்ப அரிசியுடன் இவ்வாலயத்தில் அமைக்கப்பட்ட குருபூசை அமுதானது அன்று இரவு நடுநிசி வரை வருவோர்க்கு வழங்கக் கூடியதாக. அள்ள அள்ளக் குறையாதவாறு (பொலிந்து) ஆவி பறந்து புதுப்பொலிவுடனும் இருந்த நிகழ்ச்சியானது. கிராம மக்கள் அனைவரையும் பக்த கோடிகள் ஆக்கியது. இச்செய்தி நாடெங்கும் பரவி இன்றுவரை 100 ஆண்டு களைத் தாண்டியும் பொது மக்கள் உதவியுடன் இவ்வற்புத நிகழ்ச்சியானது மிகச் சிறப்புடன் நடந்தேறிக் கொண்டிருக்கிறது. 1948இல் புதிய ஆலயம் ஒன்று அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

அதன் தலைவராக இறைவனால் சிவத்தொண்டர் மாணிக்கம் அவர்கள் திருவுளச் சீட்டின் மூலம் 3ஆண்டுகளுக்கு நியமனம் வழங்கியிருந்தார். இறையருளால் 1948இலேயே முதல் கும்பாபிஷேகம் நடந்தேறியது. அதன் நிறைவில் மகோற்சவம் இடம்பெற்றது. அதில் ஆலய மகோற்சவ நிகழ்வுகள் யாவும் சித்திரைச் சதயத்தன்று தீர்த்தோற்சவமாகவும் திருநாவுக்கரசர் குருபூசை தினமாகவும் வரக் கூடியதாக அதன் முதல் தினம் தேர் உற்சவம் நடைபெற வேண்டும் எனவும் சபையினால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இந்த நியமப்படியே தீர்த்தோற்சவ தினத்தன்று திருநாவுக்கரசர் குருபூஜையானது மருதப்பு சுவாமியின் மரணத்தின் பின் பொது மக்கள் உதவியுடன் ஆலயப் பரிபாலன தர்ம கர்த்தா சபையினால் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. மேலும் தர்மகர்த்தா சபையின் முயற்சியினால் ஆலய முன்றலில் திருநாவுக்கரசர் பாடசாலை யும், திருநாவுக்கரசர் சுவாமிகள் எழுந்தருளி இருக்கும் மகா மண்டபமான திருநாவுக்கரசர் அன்னதான மடத்தினையும் இன்று எம்மால் காண முடிகிறது. அருளாளர் பார்வையில் அன்னதானம். தாக சாந்தி என்பவற்றின் சிறப்பு "இது அவன் திருவுரு இவன் அவன் எனவே" (மாணிக்க வாசகர்) காயமே கோயிலாக (அப்பர்) யாவர்க்குமா ஒரு கைப்பிடி(அரிசி) அருளாளர் வான்புகழ் ஞானி வள்ளுவர் வாக்கினால் பார்க்கில் ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை மாற்றுவார் ஆற்றலின் பின் அதாவது பசியால் வாடும் ஒருவருடைய பசியைத் தீர்க்க முனைபவர் அவர். பசியைத் தீர்த்த பின்பே தம் பசியினைத் தீர்க்க வேண்டும் என்பதாகும். அவர் மேலும் ஒரு படி சென்று பேசுகையில் "அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப்பு" ஒருவன் பொருள் அற்ற ஏழையின் கடும் பசியினை நீக்குதல் ஒன்றே தன் செல்வத்தை தனக்குப் பின் உதவுவதற்காக சேகரிக்கும் வங்கியாகும் என்பார். "நடமாடும் கோயில் நம்மட்கும் ஒன்று ஈயின் படமாடிக் கோயில் பகவற்கதாம்" திருமூலர்.

உண்ணுகின்றான், உறங்குகின்றான். உருவம் தேரோடுகிறான். முத்துத்தாண்டவர் கீர்த்தனை வரிகள் "பகரஞானியர்க்கு பகல் உணவு அளிப்பவர்க்கு நிகரில்லை என்பது நிச்சயம் தானே திருமூலர்". "அன்புடை தொண்டர்க்கு அமுதளித்து இன்னல் களைவன் அன்னம் பரன் இணையடியே". திருநாவுக்கரசர் மண்ணில் பிறந்தார் பெறும் பயன் அண்ணலார் அடியார்க்கு

அமுது செய்தலே இப்படியாக அருளாளர்வாக்கானது எம்மை அறப்பணியாக அன்ன தானம் வழங்கலையும். தாகசாந்தி வழங்கலை யும் தலைசிறந்த தர்மப் பணியாக பொதுமக்கள் அனைவரும் உண்டபின் போதும். எனக் கூறும் நிறைவுப் பணியாக எமக்கு காட்டுவதைப் பார்க்கிறோம். அத்துடன் எந்த உயர் நிலையில் உள்ளவர்களும் அன்னதான தர்மத்தை ஏற்கும். போது இறை சந்நிதியில் ஆண்டான் அடிமை என்ற நிலையில் நின்றிறங்கி ஆணவமல நீக்கம் பெறுகின்றனர். ஏன் எமது இந்துமதம் மட்டுமன்றி கிறிஸ்தவ தத்துவமும் ஒரு அப்பத்தை ஏழாய்ப் பிரித்தளி என்கிறது.

தனது உழைப்பில் ஐந்து வீதத்தை தர்மத்திற்கு ஒதுக்கு என்கிறது இஸ்லாம். சைன மதத்தவராக ஆபுத்திரன் கையில் விளங்கிய தர்மபாத்திரம் ஏழைகள் உறுபசி அணைத்தது.

ஏன் காப்பியம் போற்றும் மணிமேகலையின் கையில் கிடைத்த அமுதசுரபி கூடப் பசிப் பிணி நீக்கியது. எனவே அடியார்கள் ஆகிய எமது ஆன்மீக சிந்தனையானது இந்நினைவுகளின் பின்பாவது சோறு மணக்கும் மடங்களையும், நீறு மணக்கும் நெற்றியினையும், நெய் மணக்கும். கையினையும் காண ஆசைப்பட வேண்டும். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்.

**வைத்திய கலாநிதி**
**மா.ஆ. பேரின்பநாதன்**
முன்னாள் ஆலய நிர்வாக சபைத் தலைவர்.

| விபரம் | | 1991 முன்னர் | | 2002 பின்னர் |
|---|---|---|---|---|
| 01. | தைப்பொங்கல் | - | | பா. பாலசந்திரன் |
| 02. | தைபூசம் | - | | பொன். வைரமுத்து |
| 03. | மாசிமகம் | ந.ம. நடராஜா (சுருவில்) | | - |
| 04. | சிவன்ராத்திரி | இ. பொன்னத்துரை | | சோ. மணிவண்ணன் |
| 05. | பங்குனி உத்தரம் | ஈஸ்வரி (கல்வியங்காடு) | | குமாரசாமி (கல்வியங்காடு) |
| 06. | சித்திரை வருடப்பிறப்பு | - | | பா. பாலசந்திரன் |
| 07. | ஐயனார் அபிசேகம் (சாந்தி) | - | | சி.க. நல்லையா |
| 08. | வைரவர்மடை | செ. கேதீஸ்வரன் (பிரான்ஸ்) | | செ. கேதீஸ்வரன் (பிரான்ஸ்) |
| 09. | வைகாசி விசாகம் | பெ. கந்தையா | | பெ. கந்தையா |
| 10. | ஆனி உத்தரம் | ம. நடராசா (சுழிபுரம்) | | - |
| 11. | ஆடிப்பூரம் | க. தங்கேஸ்வரன் | | த. பாரதிதாசன் |
| 12. | ஆடி அமாவாசை | - | | ஜீவா விஜயமாலா (லண்டண்) |
| 13. | ஆவணி சதுர்த்தி | பொ. தங்கராசா | | த. கண்ணதாசன் (பிரான்ஸ்) |
| 14. | நவராத்திரி | பொன். தருமரெத்தினம் | 01. | ந. கோணேஸ்வரன் |
| | | | 02. | சி. கலைச்செல்வன் |
| | | | 03. | ம. சச்சிதானந்தன் |
| | | | 04. | ந.மதியழகன் |
| | | | 05. | பா.கருணாகரன் |
| | | | 06. | சு. வள்ளியம்மை |
| | | | 07. | ஜ. நடேசலிங்கம் |
| | | | 08. | சுந்திரலிங்கம் கஜன் |
| | | | 09. | துஸ்யந்தன் ரேகா |
| | | | 10. | இ. குகநாதன் |
| | | | 11. | ஜெ. சுதாகரன் (விஜயதசமி) |
| 15. | புராட்டாதி சனி | இ. பொன்னுத்துரை | | சோ. கலைவாசன் (சுவிஸ்) |
| 16. | மகாமலயம் | - | | K.E.S உதயகுமார் (லண்டன்) |
| 17. | ஐப்பசி வெள்ளி | சு. குமாரசாமி | | சு. குமாரசாமி |
| 18. | கந்தசஷ்டி | பொ. சபாரெத்தினம் | | பொ. சபாரெத்தினம் |
| 19. | கார்த்திகை தீபம் | ம. இன்பநாதன் | | செ. ஜெகதீஸ்வரன் |
| 20. | ஐயப்பன் பஜனைவிழா | - | | கி. விஜயதாசன் (பிரான்ஸ்) |
| 21. | பிள்ளையார் கதை கடைசி பூசை | - | | கோ. புஷ்பராணி |

### திருவிழா உபயகாரர்கள்

01. முத்தர் குழுவினர்
02. ஆசாரி வைத்திலிங்கம் குழுவினர் அதன் பின்னர் மருதப்பு சுவாமிகளின் பேரன் ஆறுமுகம் பாலசுப்பிரமணியம் அவரது மறைவின் பின் வேலணை மணி அவர்கள்
03. சி. நல்லதம்பி குழுவினர் (சி. நாகலிங்கம் குழு, சி. முருகேசு குழு, கா. செல்லையா குழு, நா. பொன்னுத்துரை குழு)
04. நா.இ. அருணசலம் குழுவினர்
05. கா. அம்பலவாணர் பின்னர் அ. ப. பாலசுப்பிரமணியம், அ. இரத்தினசிங்கம், இ. செல்லத்துரை குழுவாகச் செயல்பட்டனர். தற்பொழுது நா. ஜெயக்குமார் (பாபு சுவிஸ்) அவர்கள்.
06. கொழும்பு அருள்நெறி மன்றம் தற்பொழுது திருமதி. மார்க்கண்டு புனிதவதி அவர்கள்.
07. முருகர் குழுவினர்
08. காசிநாதர் குழுவினர்
09. க. பொன்னம்பலம் குழுவினர், ஆறுமுகம் மாணிக்கர் குழுவினர், அ. வே. இளையதம்பி குழுவினர்
10. பொ. நாகேசு - க. சோமாஸ்கந்தன் தற்பொழுது கு. முத்துக்குமாரு குழுவினர்
11. பொன். தருமரத்தினம் குடும்பம் மற்றும் பொன். பாலசிங்கம் குடும்பம்

### எமது ஆலயத்தில் பரிபாலன தர்மகர்த்தா சபைத் தலைவர்களாக செயலாளர்களாக, பொருளாளர்களாக, உறுப்பினர்களாக இருந்து அமரர்களாகிவிட்டோர் அநேகர் உண்டு.

ஆ. மாணிக்கம், மா. ஆறுமுகம், மா. அருணாசலம், ந.இ.அருணாசலம், இ. தம்பையா, இ. சுப்பிரமணியம், நா. மயில்வாகனம், அ.கு. மதியபரணம், அ.ப. பாலசுப்பிர மணியம், மாரிமுத்து ஆறுமுகம், நா.பாலசிங்கம் (ஆசிரியர்), க. கணபதிப்பிள்ளை (ஆசிரியர்), சி. நல்லதம்பி (ஆசிரியர்), க. பொன்னம்பலம், சு. குமாரசாமி, வி. தம்பிப்பிள்ளை, இ. பொன்னம்பலம், பொன். சபாரெத்தினம், ந.ம.நடராசா (கொழும்பு வர்த்தகர்), ஆ. சிவலோக நாதன் (கொழும்பு வர்த்தகர்), கு. சிவலிங்கம் (கொழும்பு வர்த்தகர்), பொன். தருமரெத்தினம் (வர்த்தகர்), பொ. செல்லத்துரை (நீர் கொழும்பு வர்த்தகர்), வே. சுப்பிரமணியம் (உப தாபல் ஆதிபர்), செ. சோமசுந்தரம், S.K. மகேந்திரன் (சட்டத்தரணி), ந.இராசதுரை (ஆசிரியர்), கா. கந்தசாமி, ம. பாலசிங்கம், ந.தனபாலசிங்கம் (கிராமசேவர்), இ. வைத்திலிங்கம் (ஓய்வுபெற்ற கிராம சேவகர்), தம்புநடராசா, செ. கிருஸ்ணபிள்ளை, நா. ஜெகதீஸ்வரன்

### பிடியரிசி வசூல்செய்தவர்கள் - கந்தையா, ச.தம்பிப்பிள்ளை, ந.செல்லையா

| ஆண்டு | தலைவர் | செயலாளர் | பொருளாளர் | பொதுப்பிரதிநிதி |
|---|---|---|---|---|
| * 1964 | நா.இ.அருணாசலம் | செ. சோமசுந்தரம் | வே. சுப்பிரமணியம் | அ.கு. மதியாபரணம் |
| * 1965 | செ. இலகுப்பிள்ளை | செ. சோமசுந்தரம் | வே. சுப்பிரமணியம் | அ.கு. மதியாபரணம் |
| * 1969 | செ. இலகுப்பிள்ளை | செ. சோமசுந்தரம் | அ.ப. பாலசுப்பிரமணியம் | அ.கு. மதியாபரணம் |
| * 1971 | செ. இலகுப்பிள்ளை | பொன். வைரமுத்து (S.L.A.S) | அ.ப. பாலசுப்பிரமணியம் | அ.கு. மதியாபரணம் |
| * 1973 | செ. இலகுப்பிள்ளை | ந.இராசதுரை | அ.ப. பாலசுப்பிரமணியம் | அ.கு. மதியாபரணம் |
| * 1979 | செ. இலகுப்பிள்ளை | S.K. மகேந்திரன் | ந.இராசதுரை | அ.கு. மதியாபரணம் |
| * 1980 | S.K. மகேந்திரன் | கா. கந்தசாமி | ம. பாலசிங்கம் | ந.இராசதுரை |
| * 1983 | S.K. மகேந்திரன் | கா. கந்தசாமி | மு.நு.ளு. உதயகாமார் | ந.இராசதுரை |
| * 1984 | S.K. மகேந்திரன் | கா. கந்தசாமி | ம. பாலசிங்கம் | ந.இராசதுரை |
| * 1987 | ஆ.பேரின்பநாதன் | கா. கந்தசாமி | ம. பாலசிங்கம் | ந.இராசதுரை |
| * 1990 | ஆ.பேரின்பநாதன் | K.E.S. உதயகுமார் | சி. க. நல்லையா | ந.இராசதுரை |
| * 1991 | ஆ.பேரின்பநாதன் | கா. கந்தசாமி | ந.இராசதுரை | கே. சண்முகலிங்கம் (J.P) |
| * 1997 | ஆ.பேரின்பநாதன் | பொன். வைரமுத்து (S.L.A.S) | ந.இராசதுரை | கே. சண்முகலிங்கம் (J.P) |
| * 2004 | பொன். வைரமுத்து (S.L.A.S) | க.குலசேகரம் | ந.தனபாலசிங்கம் | கே. சண்முகலிங்கம் (J.P) |
| * 2007 | பொன். வைரமுத்து (S.L.A.S) | பா.வரதராஜா | இ.குகநாதன் | கே. சண்முகலிங்கம் (J.P) |
| * 2009 | பொன். வைரமுத்து (S.L.A.S) | க.குலசேகரம் | இ.குகநாதன் | கே. சண்முகலிங்கம் (J.P) |
| * 2014 | K. சண்முகலிங்கம் (J.P) | இ.குகநாதன் | ந.கோணேஸ்வான் | பொன். வைரமுத்து (S.L.A.S) |

### ஆலய அர்ச்சராக செயல்பட்டவர்கள்

மு. இராமசந்திரசர்மா
செ. நடராசாசர்மா
ருபண் சர்மா

### மெய்காவலராக செயல்பட்டவர்கள்

ஆறுமுகம், நா. பொன்னுத்துரை,
நா. முத்துகுமாரு,
செ. முத்துலிங்கம்,
சி. பொன்னையா, சு. விஸ்வலிங்கம



புாணாவிடைப்பெருமானின் ஆலயத்திலே பலகாலங்களாகப் பணியாற்றி ஆலயத்தின் திருப்பணியை வளர்ச்சிப்பணியாகக் கொண்டியங்கிவரும் முன்னாள் **செயலாளரும்,பொருளாளருமான திரு. கே.ஈ.எஸ் உதயகுமார்** அவர்கள் இலண்டன் இவ்விதழ் காலஞ்சென்றவர்களான **இராமநாதன் வைத்திலிங்கம், இளையதம்பி செல்லத்துரை, செல்லத்துரை இலட்சுமி, சதாசிவம் சண்முகநாதன், சண்முகநாதன் பவளராணி, செல்லத்துரை நித்தியானந்தன், உதயகுமார் நித்தியகல்யாணி, சண்முகநாதன் சதீஸ்குமார்,** அவர்களின் ஞாபகார்த்தமாக வெளியிடப்படுகின்றது. இவ்விதழ்பிரசுரத்திற்கு **அனுசரணையாளர்களாக செல்வி உதயகுமார் வைசாயினி, செல்வி உதயகுமார் விஸ்னுகா,** அவர்கள் வ்ாறுப்பேற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கல் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

கல்விப் பொதுத்தராதர உயர்தரம் மற்றும் முதலாம் தரம் முதல் 11 ஆம் தரம் வரை கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் உதவித் தொகையை இன்று வெள்ளிக்கிழமை முதல் மாவட்ட மட்டத்தில் செயற்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் மாணவருக்கு புலமைப்பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்றதுடன் ஏனைய 24 மாவட்டங்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று முதல் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது.

இதன்படி, பதுளை, மாத்தளை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் நாளை சனிக்கிழமையும், கிளிநொச்சி மாவட்டத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும், எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளிலும், வவுனியா, மட்டக்களப்பு, இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலும், களுத்துறை, மன்னார், அம்பாறை, குருநாகல், கண்டி மாவட்டங்களிலும் ஜூலை 17ஆம் திகதி, முல்லைத்தீவு, திருகோணமலை, பொலன்நறுவை ஆகிய மாவட்டங்களில் ஜூலை 18 ஆம் திகதியும், புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவட்டச் செயலாளர்கள் தலைமையில், அனைத்து வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் அதிபர்களின் ஒருங்கிணைப்புடன் புலமைப்பரிசில் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். முதலாம் கட்டத்தில் புலமைப் பரிசில் பெறும் மாணவர்களில் ஒருபகுதியினரை மாத்திரம் புலமைப்பரிசில் வழங்கும் விழாவுக்காக அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப் பரிசில் திட்டத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர்ப்பட்டியல் ஏற்கனவே வலய மட்டத்தில் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது. (ஒ-66)

# போதனாவில் குருதித் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கியில் தற்போது 'ஓ' பொசிட்டிவ் குருதி வகைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தகுதியுடையவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிக்கு நேரடியாக வருகைதந்து குருதிக் கொடை வழங்கி உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதி வங்கிப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-66)

# நடமாடும் சேவை இன்றும் நாளையும்

கிளிநொச்சி, ஜூலை 12

"வெல்வோம் ஸ்ரீலங்கா" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான நடமாடும் சேவை, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய விளையாட்டரங்கில் இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் இடம்பெறவுள்ளன.

இந்தச்சேவையில், தொழில் திணைக்களத்தால் வழங்கப்படும் ஊழியர்களைப் பதிவு செய்தல், பி (B) பத்திரங்களை வழங்குதல், பின்னுரித்தாளிகள் மாற்றம் செய்தல், ஓய்வுக்கு முன்னரான ஊழியர் சேமலாப நிதி மீளளிப்பு நலன்களைப் பெற்றுக்கொள்ளல் என்பன தொடர்பான அறிவுறுத்தல்கள், 30 வீத மீளளிப்பு நலனுக்கான உரித்துடமையைப் பரீட்சித்தல், ஊழியர் சேமலாப நிதியைப் பிணையாக வைத்து வீட்டுக்கடன் பெற்றுக் கொள்வது தொடர்பான வழிகாட்டல்கள், ஓய்வூதிய மீளளிப்பு நலன்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பான அறிவுரை, இறந்த ஊழியர்களின் பின்னுரித்தாளிகளுக்கு ஊழியர் சேமலாப நிதிய மீளளிப்புகளைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான அறிவுரை, இஸ்ரேல் நாடு உள்ளிட்ட வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகளுக்கு பதிவு, பணிபுரிவோரை மதிக்கும் "பாராட்டு", 'ஸ்மார்ட் யூத் கிளப்' ஊடாக இளைஞர் யுவதிகளுக்குத் தொழிற்பயிற்சி உள்ளிட்ட பல சேவைகளைளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

நிகழ்வில் தொழிலாளர் திணைக்களம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், ஊழியர் நம்பிக்கை நிதியம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள், சிறுதொழில் அபிவிருத்திப் பிரிவு, மனிதவலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களம், தொழிற்பயிற்சி அதிகாரசபை உட்படப் பல நிறுவனங்கள் தமது சேவைகளை வழங்கவுள்ளன. (ப-66)

**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளுக்குத் தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும். ஒரு சதுர அடி - 100 ரூபாய்.
077 334 1281

**விற்பனைக்கு**
நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பாவனையில் இருந்து அகற்றப்பட்ட ரயர்கள், வெற்றுப் போத்தல்கள் என்பன 17.07.2024 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.
தொ.இல :- 021 222 2143
(CR/42809) J-1

**பொது அறிவித்தல்**
**நல்லூர் பிரதேச சபை.**
**தொழில் வாய்ப்பினை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிநெறி – விண்ணப்பம் கோரல்**
நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையும் பொருட்டு சபையினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் ஒரு பகுதியாக இவ்வாண்டும் சபையின் வருடாந்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டின் கீழ் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வதியும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட வேலை வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழில்சார் வழிகாட்டல் பயிற்சிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்வதற்கு ஆர்வமுள்ள சபை எல்லைக்குள் வதியும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட வேலைவாய்ப்பற்ற இளைஞர் யுவதிகள் சபையின் தலைமை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 2024.07.22ம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
**செயலாளர்**
**நல்லூர் பிரதேச சபை.**
(CR/42811) J-1

**யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்**
நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு
ஆடைகளின் சாம்ராஜ்யம்
**இந்தியன் செலக்ஷனின்**
ஆடி மாத ஆடை தள்ளுபடி




இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம்: 12.07.2024 - 06.08.2024 வரை
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**காணி விற்பனைக்கு**
யாழ். கொக்குவில் சம்பியன் லேனில் புதிய வீட்டுடன் 2 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 985 6762

**வேலை வாய்ப்பு**
கட்டடநிர்மாண நிறுவனத்திற்கு (CIDA Grade C4) பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுயவிபரக்கோவையுடன் 07 நாட்களுக்குள் கீழ் உள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.
- தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Electrical / MEP) ( HND,NCT - Or Equivalent with Experience)
- தொழில்நுட்ப உத்தியோகத்தர் (HND, NCT, CIVIL ) - 5 year Experience or Equivalent)
- Enviormentel Officer (Degree Relevant to Environmental)

Email: vacancynsc@gmail.com
Whats App: 077 712 0945

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதித் தேர்தலுக்கு

# 2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பே!

கொழும்பு, ஜூலை 12
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது 2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பே பயன்படுத்தப்படும் என்றும் அது எதிர்வரும் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு வெளியிடப்படும் எனவும் தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு இம்மாதம் 17 ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதிக்குள் ஏதாவது ஒரு தினத்தில் தேர்தல்கள் திணைக்களத்தால் வெளியிடப்படும். அந்த அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்னதாக இறுதியாக எந்த வாக்காளர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதோ அதுவே அந்தத் தேர்தலில் பயன்படுத்தப்படும்.
அதற்கு அமைவாக 2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு பணிகள் முழுமைப்படுத்தப்பட்டு எதிர்வரும் 15ஆம் திகதி அது அத்தாட்சிப்படுத்தப்பட்டு இறுதிப்படுத்தப்படும். அதன் பின்னரே ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்படும் என்பதால், அந்த வாக்காளர் இடாப்பே தேர்தலின்போது பயன்படுத்தப்படவுள்ளது. (அ-ஒ-5)

## படுகொலை...

யோரைக் கொலை செய்தவர்கள் கைது செய்யப்பட வேண்டும் - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்று வலியுறுத்தியுள்ளார்.
இது தொடர்பில் சஜித் மேலும் தெரிவித்ததாவது:-
இன்று சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பில் பாரதூரமான சூழல் ஏற்பட்டுள்ளது. வருகிறார்கள் சுடுகின்றனர், தப்பியோடுகின்றனர். எனவே இது குறித்து நம் நாட்டு சாமானியர்களிடம் பெரும் அச்சம் நிலவுகிறது. பெரும் சந்தேகம் உள்ளது. சமூகத்தின் பாதுகாப்பு, சமூகத்தில் உள்ள குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வது தற்போதைய அரசின் பொறுப்பாகும். இதற்கான தீர்வு என்ன? சமூகத்தில் சட்டம் ஒழுங்கைப் பேணுவதன் மூலம் வன்முறையை ஒழிப்பதற்கு எங்களுடைய ஆதரவை நிச்சயம் வழங்குவோம்.
பொதுமக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். பொதுமக்களைப் பாதுகாக்க பொதுப் பாதுகாப்புத் திட்டம் செயற்படுத்தப்படவேண்டும். இதுதொடர்பில் அரசின் பதில் என்ன? இப்படி ஒரு நாடு முன்னேற முடியுமா?
இப்படியான சம்பவங்கள் சுற்றுலாத்துறையைப் பாதிக்கிறது. எனவே, சமூகப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இந்த வன்முறைக்கு எதிராக 225 பேரும் ஒரே இடத்தில் இருப்பதாக நான் நம்புகிறேன். அரசும் தன் கடமையைச் செய்யவேண்டும். நாங்கள் யாரும் பாதாள உலக போதைக்கு அடிமையானவர்களுக்காக நிற்கவில்லை. எனவே அதைச் சரிசெய்யவேண்டும்.
அதேவேளை - நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ரவிராஜைக் கொன்றவர்களைக் கைது செய்ய வேண்டும். ஜோசப் பரராஜசிங்கத்தைக் கொன்றவர்களைக் கைதுசெய்யவேண்டும். மகேஸ்வரனைக் கொன்றவர்களைப் பிடிக்க வேண்டும்.
கீத் நொயார், உபாலி தென்னக்கோன், இவர்களைக் கொன்றவர்களைப் பிடிக்க வேண்டும். அவர்களின் துன்பத்துக்காக நாங்கள் பேசினோம். நாட்டின் தற்போதைய ஜனாதிபதி, லசந்த விக்கிரமதுங்கவின் மசிறந்த நண்பர். லசந்த விக்கிரமதுங்கவுக்கு எங்கே நீதி? நான் பேசுவது அது மட்டும் அல்ல, வெளிப்படையாக, இந்த பாதாள உலகத்தை, இந்தக் கொலையை, இந்த செயல்முறையை ஒடுக்குவதற்கு அரசு ஒரு முறையான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே - என்றார். (அ-ம-44)

## நாடாளுமன்றக்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் ஆகியன இணைந்து சந்தித்திருந்தன. நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியாக அவை இயங்கின. உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப்போட்டியிடும் முடிவை இலங்கைத் தமிழரசுக் கட்சி எடுத்ததைத் தொடர்ந்து புளொட், ரெலோ என்பன வேறு சில தரப்புகளுடன் இணைந்து தங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக பிரகடனப்படுத்தின. அத்துடன் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியின் பெயரில் உள்ளூராட்சித் தேர்தலில் வேட்புமனுவும் தாக்கல் செய்திருந்தன.
இந்த நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனின் மறைவின் பின்னர், அந்தப் பதவியை தமக்குத்தருமாறு ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கோரியிருந்தார். ஆனால், இலங்கைத் தமிழரசுக் கட்சி அந்தக் கோரிக்கைக்கு மறுப்புத் தெரிவித்துள்ளது.
தலைமைப் பதவியை வழங்குவதற்கு இலங்கைத்தமிழரசுக்கட்சி தொடர்ந்தும் மறுக்குமாக இருந்தால், இதுவரை காலமும் நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கீழ் இயங்கி வந்த ரெலோவும், புளொட்டும் சபாநாயகரைச் சந்தித்து தனி அணியாக இயங்குவதற்கான கோரிக்கையை முன்வைப்பது தொடர்பில் தீவிரமாகப் பரிலீசிலித்து வருவதாக அறியமுடிகின்றது. (அ-ஒ-5)

## ரயில்...

பனாகொடையில் நேற்று வியாழக்கிழமை பகல் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அவர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
பயங்கரவாத தொழிற்சங்கவாதிகளால் நாட்டின் பொதுச்சட்டம் சவாலுக்குட்படுத்தப்படுகிறது. நிறைவேற்று ஜனாதிபதியின் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்கு சவால்விடுத்து, இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுகிறது.
அவர்கள் நாட்டின் சட்டத்தை மதிக்கவில்லை என்பதன் அடிப்படையில் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள ரயில் நிலைய அதிபர்கள் அனைவரும் சேவையிலிருந்து விலகிச் சென்றதாகக் கருதி ரயில்வே பொதுமுகாமையாளரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
கோரிக்கைகள் என்ற பெயரில் நாட்டு மக்களுக்கான சேவையைப் பலவந்தமாகப் பறிக்கமுடியாது. சுயநலமாகவும், தான்தோன்றித்தனமாகவும் அரச சேவையை முன்னெடுத்துச் செல்ல முடியாதெனவும் அமைச்சர் பந்துல மேலும் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை - ரயில் ஊழியர்களின் இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் கைவிடப்படுவதாக நேற்று இரவு அவர்கள் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-66-6)

## ஜோசப்...

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"ஜனாதிபதியின் பதவிகாலம் தொடர்பில் இருந்த இடர்பாடுகள் நீதிமன்றத்தால் நீக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முயற்சி எடுக்கப்படவில்லை. அவ்வாறு தேர்தலைப் பிற்போடும் திட்டமும் இல்லை. தேர்தலுக்கு ஆளுங்கட்சி தயாராகிவிட்டது. எதிர்வரும் 17ஆம் திகதிக்குப் பிறகு தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு விடுத்த பின்னர் முழுவீச்சுடன் தேர்தல் நடவடிக்கையில் இறங்குவோம்.
எதிரணியில் இருப்பவர்களுக்கு தேர்தலைப் பிற்போட்டு பழக்கம் இருக்கலாம். அதனால்தான் தேர்தல் குறித்து அவர்களுக்குச் சந்தேகம் உள்ளது. ஆனால், எங்களுக்குத் தேர்தல்களைப் பிற்போட்டுப் பழக்கம் இல்லை.
அதேவேளை, இந்த நாட்டில் பிரச்சினையை ஏற்படுத்துவதற்கு சில தொழிற்சங்கங்கள் முற்படுகின்றன. தீவிராத அமைப்புப்போல சில தொழிற்சங்கங்கள் செயற்படுகின்றன. அவற்றின் தலைவர்கள் தீவிரவாதிகள்போல் செயற்படுகின்றனர். தமது கோரிக்கையை வென்றெடுக்க மக்களைப் பணயக் கைதிகளாக்குகின்றனர். புலிகளும் இவ்வாறுதான் மக்களைப் பணயக் கைதிகளாகப் பயன்படுத்தினர். ஜோசப் ஸ்டாலின் போன்றவர்கள் தீவிரவாதிகள்தான்" - என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## முல்லையில்...

துள்ளதுடன் மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.
சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-
வெளிநாட்டிலிருந்து வருகை தந்தவர்களைக் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி அழைத்து வந்த ஹைஏஸ் வான் மேற்படி பகுதியில், முன்னால் பயணித்துக் கொண்டிருந்த கனரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.
விபத்தில் படுகாயமடைந்த நால்வரும் மீட்கப்பட்டு, கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் 84 வயதான முதியவரொருவர் சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார். ஏனைய மூவரும் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாங்குளம் பொலிஸார் இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-66)

## சட்டமா...

கர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.
அரசமைப்புப் பேரவை நேற்று வியாழக்கிழமை சபாநாயகரின் தலைமையில் கூடியபோதே இதுதொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அரசமைப்புப் பேரவையின் தீர்மானம் தொடர்பாக ஜனாதிபதிக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்படும் எனவும் சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை - சட்டமா அதிபராகவிருந்த சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவிக்காலம் நிறைவுக்கு வந்த நிலையில் ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க அண்மையில் பதில் சட்டமா அதிபராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## தமிழக...

நெடுந்தீவுக் கடற்பகுதியில் நேற்று அதிகாலை மூன்று விசைப்படகுகளில் சட்டவிரோதமான மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அவர்கள், கடற்கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.
காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துவரப்பட்ட தமிழக மீனவர்கள், மேலதிக விசாரணைகளின் பின்னர் மயிலிட்டி மீன்பிடித்துறைமுகத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு, யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் பாரப்படுத்தப்பட்டனர். (அ-ம-100-66)

## யுவதி...

வாகனத்திலிருந்து இறக்கிவிட்டுத் தப்பியோடியுள்ளனர். இது தொடர்பில் பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை சந்தேகநபர்களாகக் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுள்ளன. (அ-ம-125)

## பருத்தித்துறை...

புளியம்பொக்கணைப் பகுதியில் பாதுகாப்பற்ற நிலையில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள சிறு மேட்டில் (பம்மிங்) விபத்துக்குள்ளானார்.
கிளிநொச்சிப் பொதுமருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த அவர், கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்தார். (அ-ம-100-66)

## யாழ்...

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இன்று காலை இடம்பெறும் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து, இன்று மாலை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது. (அ-ம-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தங்கச் சுரங்கத்துக்குள் புதைந்து 11 பேர் சாவு!



ஜகார்த்தா, ஜூலை 12

இந்தோனேஷியா – சுலவேசி தீவில் உள்ள சட்ட விரோத தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட மண்சரிவில் சுமார் 11 பேர் உயிரிழந்துள்ளனர். 45 பேர் காணாமற் போயுள்ளனர். அங்கு பெய்துவரும் கனமழை காரணமாக மண்சரிவு ஏற்பட்டுள்ளது. அதில் சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

காணாமற் போனவர்களைத் தேடுவதற்கான தேசிய மீட்புக் குழு, பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அடங்கிய 164 பணியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் தொடர்ந்தும் மழை பெய்து வருவதன் காரணமாக மீட்புப் பணியில் இடையூறு ஏற்பட்டுள்ளது என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

(ஏ-இ)

**வேலை வாய்ப்பு**

நிதி நிறுவனத்தில் வேலை செய்ய ஆர்வம் உள்ளவரா நீங்கள் !

இப்போதே உங்கள் சுயவிபரக்கோவையை எங்களுக்கு அனுப்புங்கள்.

வெற்றிடம் காணப்படும் இடங்கள் : யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்.

E.mail :- indran.nevin15@gmail.com

T.P : (Whatsapp) 077 329 0597

(CR/42781) J-1

**வாடகைக்கு உண்டு**

இல. 3 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

இரண்டாம் ஒழுங்கையில்

( பழைய வலம்புரி அமைந்த இடம் )

அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய புனரமைக்கப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு.

நிறுவனங்கள் நடாத்துவதற்கு உகந்த இடம்.

076 973 2080, 077 969 9624

(CS/55560) J-1

## அமிர்தலிங்கத்தின் நினைவுதினம்

யாழ்ப்பாணம் ஜூலை 12

எதிர்க்கட்சித் தலைவரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவருமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 35ஆவது ஆண்டு நினைவு தினம் நாளை சனிக்கிழமை காலை 7 மணியளவில் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் முன்றலில் அமைந்துள்ள திருவுருவச்சிலையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நினைவு தினம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-125)

## ட்ரம்பைத் தாக்கும் கமலா ஹரிஸ்!

வோஷிங்டன், ஜூலை 12

அமெரிக்கத் துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

ட்ரம்பின் ஆதரவாளர்கள் 900 பக்க திட்டத்தை உருவாக்கி 'திட்டம்-2025' என்று அழைக்கின்றார்கள். இது சமூகப் பாதுகாப்பைக் குறைக்கும் திட்டம். அதில் கருத்தடை தொடர்பான திட்டமும் உள்ளது. அது செயற்படுத்தப்பட்டால் இனப்பெருக்க சுதந்திரத்தின் மீதான ட்ரம்பின் முழுத் தாக்குதலாக இருக்கும் - என்றார். (ஏ-இ)

## வழுக்கி விழுந்த மூதாட்டி இறப்பு!

யாழ்ப்பாணம் ஜூலை 12

வீட்டில் வழுக்கி விழுந்து மயக்கம் அடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவந்த மூதாட்டி ஒருவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

புலோலி தெற்கு, புலோலியைச் சேர்ந்த இராசம்மா சின்னத்தம்பி (வயது -82) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 7ஆம் திகதி அவர் மலசல கூடத்துக்குச் சென்றபோது வழுக்கி விழுந்து மயக்கம் அடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். இதையடுத்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இதன் பின்னர், மீண்டும் அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில், நேற்றுமுன்தினம் காலை அவர் சிகிச்சையின்போது அவர் உயிரிழந்தார்.

பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-100)

**மணமகள் தேவை**

யாழ். இந்து (V) 1987 இல் பிறந்த மிருகசீரிட நட்சத்திரம் கொழும்பில் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு:- 077 401 5729

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 100 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 2வது காணி.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்.
- உங்கள் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை 5 1/2இலட்சம்.
- தரகர் தேவையில்லை.

**பார்வையிடும் நேரம்:**

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.

தொடர்புகளுக்கு : ஜெயம்

077 814 7389, 077 986 5457

(CS/812) J-1




நிகழும் மங்களகரமான குரோதி வருடம் 12.07.2024 வெள்ளிக்கிழமை உத்தர நட்சத்திரமும், ஷஷ்டியும் சித்தாமிர்த யோகமும் கூடிய காலை 8.31 - 10.21 வரையான சுபமுகூர்த்த வேளையில்

**நியூ அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**

எனும் எமது மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலைய புதுக்கடை திறப்பு விழாவில் தாங்களும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கண்டி வீதி, கொடிகாமம்

(இலங்கை வங்கிக்கு அருகாமையில்)

077 414 6425

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

திரு. கருணாமூர்த்தி (கருணா) குடும்பத்தினர்



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... அமைந்துள்ள அவர்களது பணிமனையில் 12.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org